www.padippakam.com

# மக்கள் பண்பாடு

ஆகஸ்டு—டிசம்பர் 95

நன்கொடை ரூ 6-00



இந்துமத பாசிசம் X உழைக்கும் மக்கள்

படிப்பகம்

www.padippakam.com

# மக்கள் பண்பாடு

*மக்கள் பண்பாட்டு*

*பேரவை இதழ்*

3

*ஆசிரியர், வெளியிடுபவர்:*

**செந்தாரகை**

தொடர்பு முகவரி:
எண் : 42, 96வது தெரு,
15வது செக்டர்,
கே. கே. நகர்,
சென்னை—78

*அச்சு : அலைகள் அச்சகம்,*
*சென்னை—24*

## உள்ளே...

பக்கம்

| | |
|---|---|
| தலையங்கம் | 1 |
| உங்களுடன் சில வரிகள் | 3 |
| வினாயகர் ஊர்வலம் | 4 |
| வாசகர் தளம் | 9 |
| பண்பாட்டுப் போராளிகள் | 13 |
| சின்னத்திரை மூலம் எண்ண உருவாக்கம் | 19 |
| சிறுகதை: சாலையோர கனவுகள் | 30 |
| தினமணியின் சனநாயக மேடையில் திசையற்றவர் களின் திறானாய்வுகள் | 33 |
| மதிப்பிற்குரிய துரோகிக்கு ஒரு மடல் | 42 |
| மற்றும் சில கவிதைகள் : | |
| முகப்பு ஓவியம் ஜீவாமணி | |

**எங்கு வர்க்கப் போராட்டம் இருக்கின்றதோ, அங்கு மட்டும் தான் தத்துவம் இருக்கும். நடைமுறைக்கு அப்பாற்பட்டு அறிவு ஆதாரமுறை இயல் பற்றி விவாதிப்பது என்பது நேரத்தை வீணாக்குவது ஆகும். தத்துவத்தை கற்கும் தோழர்கள் கிராமத்திற்கு செல்ல வேண்டும். கோடையிலோ (அ) குளிர்காலத்திலோ வர்க்கப் போராட்டத்தில் பங்குக் கொள்வதற்கு அவர்கள் கிராமங்களுக்குச் செல்ல வேண்டும்.**

○ மா-சே-துங்

www.padippakam.com

**தலையங்கம்**

# இந்துமத பாசிச பண்பாடு

டிசம்பர்-6. இந்திய வரலாற்றில் ஒரு துக்கநாள்! இந்துமத வெறி அமைப்புகளும்—காங்கிரசும் கைகோர்த்து பழமை மிக்க வரலாற்றுச் சின்னமான பாபர் மசூதியைத் தரைமட்டமாக்கிய கொடூரநாள். பம்பாய், சூரத் போன்ற பல நகரங்களில் ஆர். எஸ். எஸ். பிஜேபிகாரர்களின் கொலைவெறி வடுக்கள் இன்னும் மாறவில்லை. இந்த ஆண்டும் உ.பி. மாநிலத்தின் மதுராவிலும் கோரத்தாண்டவத்தை நடத்த முனைந்தார்கள். அதற்கு சாதகமாக மாயாவதி அரசாங்கம் இல்லை என்பதாலும், பெரியார் விழா நடத்தியது மற்றும் பல அரசியல் காரணங்களால் பகுஜன் சமாஜ் கட்சியின் ஆட்சியை கவிழ்த்தனர். வரும் பாராளு மன்ற பொதுத்தேர்தலில் மைய ஆட்சியைப் பிடிப்போம் என்று இந்துமத பாசிசவாதிகள் கொக்கரிக்கின்றனர். அதற்காக எல்லா விதமான ஒட்டுப்பொறுக்கி கயவாளிதனங்களையும் செய்து வரு கின்றனர்.

தங்களது ஏகாதிபத்திய— நிலவுடமை நோக்கங்களுக்கு சாதகமாக பல்வேறு வரலாற்று உண்மைகளை திரித்து பரப்பு கின்றனர். வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்த பகத்சிங்கையும், பார்ப்பனீயத்தை அம்பலப்படுத்திய அம்பேத்காரையும், மற்றும் விவேகானந்தர், மாராட்டிய சிவாஜி போன்றவர்களின் நோக்கங் களை, வாழ்க்கையை திரித்து தங்களுக்கு ஆதரவாக பயன்படுத்தி வருகின்றனர். அதே வேளையில் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் அடிவருடியாக இருந்து சேவகம் செய்த ஆர்.எஸ்.எஸ்.யை நிறுவிய கோல்வார்கர், ஹெக்டேவர் போன்றோரை ''சுதந்திர போராட்ட வீரர்களாய்'' மக்கள் முன் சித்தரிக்க இந்த கும்பல்கள் முயல்கின்றன. ஒரு புறம் சுதேசி இயக்கம் என்று கத்திக் கொண்டு மறுபுறம் 'என்ரான்' போன்ற பன்னாட்டு ராட்சசதக் கம்பெனி களுக்கு பட்டு கம்பளம் விரிக்கிறது மகாராஷ்டிர பி.ஜே.பி! இவர் களின் சுதேசி முகமூடி முழுமையாக மக்களிடம் அம்பலப்படாமல் உள்ளது.

சிறுபான்மை மக்களின் பண்பாடுகளையும், தேசிய இனப் பண்பாடுகளையும் இந்துமத பாசிசவாதிகள் திட்டமிட்டு அழித்து

www.padippakam.com



'பாரத கலாச்சாரத்தை'' வன்முறையாக மக்கள்மீது திணிக்கின்றனர். இஸ்லாமிய மதத்திற்கு எதிராக கட்டுக்கதைகளை புனைந்து பரப்புகின்றனர். தாழ்த்தப்பட்ட—பிற்படுத்தப்பட்ட மக்களின் இட ஒதுக்கீட்டை எதிர்க்கின்றனர். தாழ்த்தபட்ட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் இடையே தீராத பகையை சாதி மோதல்கள் மூலம் உண்டாக்குகின்றனர். நாற்றமெடுத்த சனாதன சாதிய பண்பாட்டை காக்க உறுதியாக பாடுபடுகின்றனர். உடன்கட்டை ஏறுதல், குழந்தை திருமணம், சமூக உழைப்பில் பெண்கள் ஈடுபடுவதை தடுத்தல் போன்ற பல விசயங்களில் பெண்களுக்கு எதிராக இருந்து பெண் அடிமைதனத்தை காக்க அரும்முயற்சி செய்கின்றனர். சாதாரணமாக மக்களிடம் உள்ள பிள்ளையார் வழிபாடு, தீப வழிபாடு, அம்மன் வழிபாடு, ராமர்—கிருஷ்ணர் வழிபாடு, முருகன் வழிபாடு போன்ற பக்தி உணர்வுகளை, பயங்கர பாசிச வெறியாக கலவரத்திற்கான மனப்பான்மையாக இந்த பாசிச கும்பல்கள்கள் மாற்றி, மக்களிடம் செல்வாக்கை அடைய நினைக்கின்றனர்.

பிற்போக்கான சீரழித்த பழக்கங்கள் வழக்கங்கள், மூட நம்பிக்கைகளை, பாரம்பாரியம், மத நம்பிக்கை, மரபு என்ற இவர்கள் பெயர்களில் வளர்ப்பதற்கு அலைகிறார்கள். ஏகாதிபத்திய சீரழிவு பண்பாட்டையும், ஆடம்பரங்களையும் ஊக்குவிக்கின்றனர்.

இவ்வாறாக பண்பாட்டின் கூறுகளான மொழி, கல்வி, கலை, இலக்கியம், வழிபாடு, சாதி, மதம், தத்துவம், குடும்ப—சமூக உறவுகள், நம்பிக்கைகள், பழக்கங்கள், மனோபாவங்கள், வழிபாடுகள் போன்ற சமுதாயத்தின் அனைத்தும் தழுவியவைகளில் பாசிச கூறுகளை திட்டமிட்டு வளர்த்து வருகின்றார்கள். சுயமரியாதை, சனநாயகம், சகிப்புதன்மை, ஆதிக்க எதிர்ப்பு மனோபாவம், ஆண்—பெண் சமத்துவம், சாதி—மத தடைகளை உடைத்து ஒன்று கலத்தல், கூட்டு செயல்பாடு, கூட்டு சிந்தனை போன்ற பல ஆண்டுகளாக மக்களின் போராட்டங்களில் விளைந்து செழித்த நற்பண்புகளை விழுங்கி ஏப்பம்விட பாசிசவாதிகள் முயல்கின்றனர். இறுதியில் பயங்கரமான பாசிச அரசை நிறுவுவதற்காக ஒரு பரந்த பட்ட சமூக அடிதளத்தை உருவாக்குவதற்கு உகந்த இந்துமத பாசிச பண்பாட்டை உருவாக்கி வருகின்றார்கள். இந்த பாசிச பண்பாட்டை வீழ்ந்த மக்களின் பண்பாட்டு செழுமைகளை பேணி காப்பதும், புதிய பண்பாட்டை விரிவுபடுத்துவதும் இன்றைக்கு இலக்கியவாதிகளின், கலைஞர்களின், பண்பாட்டு ஆர்வலர்களின் பிரதான பணியாகும்!! □

படிப்பகம்

# உங்களுடன் சில வரிகள்

*அன்புள்ள வாசகர்களே! தோழர்களே!!*

இந்த இதழுடன் ஓராண்டு முடிவு அடைகின்றது. ஓராண்டில் நான்கு இதழ்கள் கொண்டு வர திட்டமிட்டோம். சில காரணங்களால் குறிப்பாக பொருளாதார காரணத்தால் மூன்று இதழ்களே கொண்டுவர முடிந்தது. உங்கள் ஒத்துழைப்புடன் வரும் ஆண்டில் இக்குறையை நிறைவு செய்வோம்! சந்தாவையும், இதழ் வளர்ச்சிக்கான நன்கொடைகளையும் அளித்து 'மக்கள் பண்பாடு' வளர உதவுங்கள்!

சென்ற இதழைப் பாராட்டியும், விமர்சனம் செய்தும் பல மடல்கள் வந்துள்ளன. செவிவழியாகவும் நிறைய வந்துள்ளன. அட்டைப்படத்தில் ''பறை அடிப்போம். மீண்டும் பறையடிப்போம்'' என்பது தலித் மக்கள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட தொழிலை தொடர்ந்து செய்ய சொல்வதுபோல் உள்ளதாக பல விமர்சனங்கள் வந்துள்ளன. மீண்டும் தலித் மக்கள் தங்கள் விடுதலைக்காக போர் முழக்கம் எழுப்ப போர்பறை ஒலிப்பார்கள் என்ற பொருளில்தான் எழுதப்பட்டது. சரியாக புரியும் படி இந்த விசயத்தை எழுதாமல் போனதற்கு சுயவிமர்சனம் ஏற்றுக்கொள்கிறோம்.

பறைமுழக்கம் பக்கம் 38யில், ''AILRCயில் மக்கள் கலை மன்றத்திற்கு பதிலாக மக்கள் பண்பாட்டுப் பேரவை உறுப்பினராக இணைவது''என்பதை மாற்றி''மக்கள் கலைமன்றம் என்பது மக்கள் பண்பாட்டு பேரவையில் இணைந்துவிட்டது. தற்போது AILRCயில் மக்கள் பண்பாட்டு பேரவையே உறுப்பினராக உள்ளது'' என்று படிக்கவும். தவறுக்கு வருத்துகிறோம்.

இந்த இதழில் புதியதாக வாசகர் பகுதி என்று புதிய களத்தை இணைத்துள்ளோம். தொடர்ந்து படைப்புகள், விமர்சனங்கள் அனுப்பி உங்கள் இதழை வளர்த்தெடுங்கள்! நண்பர்களுக்கு அறிமுகப்படுத்துங்கள்!

**தோழமையுடன்**

**ஆசிரியர்குழு**

# விநாயகர் ஊர்வலம்

# பக்தி உணர்வை பாசிச வெறியாக்கும் சதி

மணியோசை டிங்... டிங்... டிங் என்று எழுப்பியபடி மிகப் பெரிய உடலை இப்படியும், அப்படியும் ஆட்டிக் கொண்டு நடந்து வரும் யானை பார்ப்பவர் யாருக்கும்—குறிப்பாக சிறுவர்களுக்கு உற்சாகம் ஊட்டக் கூடிய ஒன்று. மனிதரை கண்டாலே கூச்சம் அடைந்து ஓடும் மூஞ்சூறு. பிள்ளையார் சாமி கூட எட்டு ஆண்டுகளுக்கு முன்பு வரை இப்படித்தான் பலப் பகுதிகளில் சிறுவர்களின் பிரியமான உணவான சுண்டல், எள்ளு, கொழுக் கட்டை ஆகியவற்றின் நாயகனாக வண்ணக் காகிதக் குடைகளில் வலம் வந்து கல்வி கடவுளாக இருந்தார். ''பெண்ணு தரேன் பிள்ளையாரப்பா... மூழ்கி போ பிள்ளையாரப்பா'' என்று கிராமத்து சிறுவர் சிறுமியர் கிணற்றில் தள்ளிய போது தொபுகடீர் என்று சாதுவாக களிமண் பிள்ளையார் கரைந்தார். 30 ஆண்டுகளுக்கு முன்னால் தந்தை பெரியார் மூலைக்கு மூலை பிள்ளையார் சிலைகளை உடைத்துப் போட்டபோதும் கூட ''சிவனே'' என்று கம்மென்று உடைந்து பிள்ளையார் தூளானார். இன்றோ...

விநாயகர்... வீரவிக்னேஷ்வரர் என்று பயங்கரமாக போர் கோலம் பூண்டு பவனி வருகிறார். சிங்க வாகனத்தில்... தலைமேல் சீறி பாயும் ஐந்து தலைகள் கொண்ட நாகத்தில்... ரத்தம் சொட்டும் உருவிய வாளுடன்... சூரன் வயிற்றை கையால் கிழித்து குடலை மாலையாக போட்டவாறு... என்று பல விநாயகர்கள். மூஞ்சூறுகூட கோரைப் பல் முளைத்த பெருச்சாளியாகி விட்டது. ''ஐந்து மூணும் எட்டு... துலுக்கன கண்டா வெட்டு'', ''அச்சமற்ற இந்துவே அணிதிரண்டுவா'' என்று வெறிக் கூச்சல்கள். 51 சிலைகளுடன் ஆறு ஆண்டுகளுக்கு முன் சென்னையில் ஆரம்பித்தது. இன்று 500 சிலைகள் ஊர்வலமாக மாறி பயமுறுத்துகிறது. ஒவ்வொரு ஆண்டும் கலவரங்கள்... சூறையாடல்... துப்பாக்கி சூடு... உயிர்கள் பலி. இப்படி பிள்ளையார் பேட்டை ரவுடியாக, சைக்கிள் செயினுடன், வெடி குண்டுகளுடன் இரத்த வெறிபிடித்து அலைய காரணம் என்ன? இதன் பின்னணி மர்மம் என்ன?

www.padippakam.com



1970 களின் ஆரம்பத்தில் ஏற்பட்ட ஏகாதிபத்தியத்தின் பொருளியல் நெருக்கடி விரிவடைந்து, கடந்த சில ஆண்டுகளில் மோசமான சூழ்நிலையை அடைந்துள்ளது. ஆசியா, ஆப்பிரிக்கா லத்தீன் அமெரிக்க நாடுகளிலும், ஏகாதிபத்திய நாடுகளிலும் இன்று வரையிலும் கண்டிராத அளவிற்கு வேலையின்மை, வறுமை, பட்டினி, குடியிருப்புஇன்மை, குற்றங்கள், சமூக பாதுகாப்பின்மை போன்றவைகள் அதிகரித்துள்ளன. இதனால், தீவிர அரசியல், சமூக நெருக்கடிகள் அதிகரித்து வருகின்றன.

அதிருப்தியும், விரக்தியும் அனைத்து மக்களிடமும் பரவி வந்துள்ளன. மக்கள் முதலாளிய கட்சிகளிடமும், பாராளுமன்ற அமைப்பின் மீதும் முழு நம்பிக்கையும் இழந்துவிட்டனர். சட்டத்திற்கு புறம்பாக வீரமிக்க போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே, ஏகாதிபத்தியங்களும், இவர்களின் காலனிய—அரைகாலனிய நாடுகளில் உள்ள அடிவருடிகளும் பழைய முறைகளில் ஆளமுடியாது என்று முடிவுக்கு வந்துள்ளனர் அதனால் வெளிப்படையான பயங்கரவாத, சர்வாதிகார ஆட்சி முறையான பாசிச முறையை கட்டி அமைக்க முயல்கின்றன. இதன் தொடர்ச்சியாகத்தான் இந்திய ஆளும் வர்க்கங்கள், தங்களின், தங்கள் எசமானர்களின் நெருக்கடியில் இருந்துதப்பிக்க இந்துமத பாசிச பயங்கரவாத ஆட்சியை உருவாக்க முயற்சிக்கின்றனர்.

ஆனால், பாசிசம் ஆட்சிக்கு வருவதற்குமுன் அதற்கான சமூக அடித்தளத்தையும், வர்க்க உள்ளடக்கத்தையும் உருவாக்குவது அவசியம் ஆகும். அதற்காக பின்தங்கிய உணர்வுடைய மக்களின், ஏழைகளின் நம்பிக்கைகள், பயங்கள், பிற்போக்கு சிந்தனைகள், பழக்கங்கள், உணர்ச்சிகளைப் பயன்படுத்தி இந்து மத பாசிச பண்பாட்டை மக்களிடம் ஊட்ட முயல்கின்றனர். ஆண்டாண்டு காலமாக மக்களிடம் உள்ள பக்தி உணர்வை, பல வகையான வழிபாடுகளை தங்களின் நோக்கங்களுடன், சதித்தனமாக இணைத்து பாசிச பண்பாட்டை மக்களிடம் ஊட்ட முயல்கின்றனர். பிள்ளையார் வழிபாடு, கார்த்திகை வழிபாடு, அம்மன் வழிபாடு, லிங்க வழிபாடு, தீமதி வழிபாடு, முருகன் வழிபாடு, ராமர் வழிபாடு, கிருஷ்ணன் வழிபாடு ஆகிய எல்லாவற்றையும் பாசிஸ்டுகள் பயன்படுத்துகின்றனர்.

குறிப்பாக வினாயகர் வழிபாடு இந்தியாவின் பல இடங்களில் இருப்பதால் இந்து பாசிஸ்டுகளின் நோக்கத்திற்கு உதவி

படிப்பகம்

www.padippakam.com



கரமாக உள்ளது. 1350 ஆண்டுகளுக்கு முன், கி.பி. 641-642 ஆம் ஆண்டில் பல்லவ மன்னன் நரசிம்மவர்மனின் தளபதி பரஞ்ஜோதி (சிறுத்தொண்ட நாயனார் என்று பெரிய புராணத்தில் வழங்கப் பட்டவர்) தலைமையில் சென்ற படை மாராட்டிய மாநிலத்தில் உள்ள வாதாபியில் புலிகேசி மன்னனைத் தோற்கடித்தது. அங்கிருந்த ''தொந்தி கணபதியை'' தமிழ் நாட்டிற்கு அவர் கொண்டு வந்தார் 12 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட சைவ மத மறுமலர்ச்சியின்போது இந்த கணபதி வழிபாடு முருகன், சிவன், வழிபாடுகளுடன் இணைக்கப்பட்டது. தமிழ்நாட்டில் பல இடங்களில் பரப்பப்பட்டது. இந்த பக்தி உணர்வைதான் இந்து மத பாசிஸ்டுகள் பயன்படுத்தி, பாசிசப் பண்பாட்டுற்கான அடிதளத்தை உருவாக்கி வருகிறார்கள்.

விநாயகர் சதுர்த்தியின் போது வைக்கப்படும் களிமண் சிலை மூன்று அல்லது ஐந்து நாட்கள் கழித்து ஊரில் உள்ள கிணற்றில், குட்டையில், ஆற்றில் போடப்படும். இவ்வாறு ஊர் வலமாக சென்று போடும் சாதாரணப் பழக்கத்தை இந்துமத வாதிகள் தங்களின் பாசிச வெறிக் கூச்சலுக்கான ஊர்வலமாக படிப்படியாக மாற்றிவிட்டனர். அத்துடன் 1893 ஆம் ஆண்டில் பாலகங்காதர திலகரால் மகாராட்டிர மாநிலத்தில் ஆங்கிலேயருக்கு எதிராக தேசபக்தியை மக்களுக்கு ஊட்ட பயன்படுத்தப் பட்டது. இன்றோ இந்த சுதந்திர உணர்ச்சியானது ஆர்.எஸ். எஸ்— காரர்களால் அகண்ட பாரதத்தை, இந்து இராச்சியத்தைக் கட்டி அமைக்கும் நோக்கில் பயன்படுத்தப்படுகின்றது. கடந்த காலத்தில் புகழ் பெற்ற சின்னங்கள், குறியீடுகள் ஆகியவற்றை பயன்படுத்துகின்ற பாசிஸ்டுகளின் நோக்கம் இங்கே ஒன்றுபடுகின்றது.

தமிழ்நாடு முழுவதும் 90-களின் இறுதியில் ஊர்வலங்கள் இந்து முன்னணி, ஆர்.எஸ்.எஸ். காரர்களால் பல நகரங்களில் ஆரம்பிக்கப்பட்டது. முஸ்லீம் வாழும் பகுதிகளில் திட்டமிட்டு கலவரங்கள் செய்யப்பட்டது. நமது மக்களின் கடவுள் நம்பிக் கைக்கு நாங்கள் தான் ஒட்டுமொத்த குத்தகையாளர் என்று நம்மை கேட்காமலேயே உரிமை கொண்டாடி நமக்கு எசமானர் கள் ஆனார்கள். மக்களுடைய பக்தியின் பெயரால் தங்களின் கொலை வெறியை, கலவரங்களை அரங்கேற்றினார்கள். வினாயகர் ஊர்வலம் என்றாலே பயபீதி, அச்ச உணர்வு மக்களிடம் தோற்றுவிக்கப்பட்டது. இதற்கான வித்து திருவல்லிக்கேணியில் 1990 யிலேயே ஊன்றப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com

## 7

திருவலலிக்கேணி சென்னையின் முக்கிய வணிக மையம். முஸ்லீம்கள், பார்ப்பனர்கள், மீனவர்கள் பெருவாரியாக வசிக்கின்றனர். முஸ்லீம்களின் வணிகத்தை கபளிகரம் பண்ண மார்வடிகளும் பார்ப்பனர்களும் முயல்கின்றனர். அதற்காகவே இப்பகுதியில் கலவரத்தை ஏற்படுத்தி முஸ்லீம்களை விரட்ட முயல்கின்றனர். ''முரளி கபே''என்ற உணவு விடுதியின் பார்ப்பன முதலாளியும், ''இரத்தினாஸ் கேப்''உரிமையாளர் மார்வாடியும் இக்கலவரத்திற்கு தலைமை தாங்கினர். 2-2-90 அன்று நடந்த திட்டமிட்ட கலவரத்தில் காவல்துறையானது மூன்று முஸ்லீம்களின் உயிர்களை பறித்தது முஸ்லீம் கடைகளை இந்துமத வெறியர்களுடன் இணைத்து சூறையாடியது. சில பார்ப்பன போலீஸ் அதிகாரிகள் இவற்றின் முன்னணியில் இருந்தனர் அதே நாளில் வடஆற்காடு மாவட்டம் ஆம்பூர் நகரத்தில் ஜெயா அரசின் காவல்துறை 12 முஸ்லீம்களை சுட்டு கொன்றது. என்ன மந்திரம் இது! துப்பாக்கிகளின் தோட்டாக்கள் முஸ்லீம்களை மட்டும்தான் பலி வாங்குமா? தொடர்ந்த ஆண்டுகளில் சர்வகட்சியின். மக்கள் இயக்கங்களின் வேண்டுகோளுக்கு இணங்க முஸ்லீம்கள் ஊர்வலத்தை நடத்தவில்லை. ஆனால், இந்து முன்னணி, ஆர்.எஸ். எஸ். காரர்கள் தொடர்ந்து முஸ்லீம் எதிர்ப்பு ஊர்வலங்களை பக்தியின் பெயரில் நடத்தினர். அவ்வளவு கொழுப்பு!

1992 யில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட பின்பு, வெறிபிடித்த இக்கும்பலின் ஆட்டம் இன்னும் அதிகமானது. ஊழல் மகாராணி ஜெயலலிதா அரசானது இவர்களுக்கு துணையிருப்பதுடன், தானே முன்னின்றும் இந்துமத வெறிலைப் பரப்பி வருகின்றது. தாழ்த்தப்பட்ட மக்கள் போலிசால் படுகொலை செய்யப்பட்டால் நிவாரணம் கூட வழங்காத தமிழக அரசு, இந்து முன்னணியினர் பலியானால் லட்சக்கணக்கில் அரசாங்கப் பணத்தை வாரிக் கொடுக்கின்றது. கும்பகோணம் மகாமகம், மதுரை மீனாட்சி கும்பாபிஷேகம் போன்றவற்றை ஜெயா—சசி கும்பலே தலைமை தாங்கி நடத்தியது. அமைச்சர்களும், அதிமுக தலைவர்களும் இந்து முன்னணியினர் நடத்தும் ஊர்வலங்களில், திருவிழாக்களின் பங்கு கொள்கின்றனர். தங்களது ஊழலையும், சுரண்டலையும், அடக்கு முறையையும் மறைக்க, விலை உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை போன்ற பிரச்சனைகளில் இருந்து மக்களின் கவனததை திசை திருப்ப கடவுள், மூடநம்பிக்கைகளை ஜெயா அரசு பயன்படுத்துகின்றது. இந்து முன்னணி, பி.ஜே.பி, ஆர்.எஸ்.எஸ் கும்பல்களின் நோக்கமும் இதுதானே

படிப்பகம்

www.padippakam.com



இத்தகைய தொப்புள் கொடி கள்ள உறவினால் இந்துமதவெறி தமிழ்நாட்டில் கொடிகட்டிப் பறக்கிறது. முஸ்லீம்கள் அதிக அளவில் கொடூர 'தடா' சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப் பட்டுள்ள மாநிலங்களில் தமிழகமும் ஒன்று.

**பிள்ளையார் பிடிக்க குரங்கான கதை**

இந்த பின்னணியில்தான் இந்த ஆண்டும் இச்சதி கும்பல் பல நகரங்களில் வினாயகர் ஊர்வலங்களை நடத்தியது. சென்னையிலும் நாகப்பட்டினத்திலும் கலவரங்களை ஏற்படுத்தமுயன்றன. திருவல்லிக்கேணி மக்கள் வேண்டுகோள் விடுத்தும் ஊர்வலத்தை கைவிட இந்து முன்னணி மறுத்தது. தரகு முதலாளிகள், பண்ணையார்கள் குறிப்பாக மார்வாடிகள், பார்ப்பனர்கள் பணபலத்துடன், அடியாட்களையும் ரவுடிகளையும் இணைத்து பல இடங்களில் பெரிய அளவில் கொடூர, பயங்கரமான வினாயகர் உருவங்கள் நிறுவப்பட்டன. பணம் 'தண்ணி'யாக, தண்ணிக்காக செலவிடப்பட்டு ரவுடிகளையும், ஆயுதங்களையும் திரட்டியது.

மூன்று பகுதிகளாக வந்த ஊர்வலங்களில், மத்திய சென்னைப்பகுதிக்கு தலைமை தாங்கி பாசிச வெறிநாய் ராமகோபாலன் வந்தான். செக்ஸ் வக்கரங்களை தூண்டும் கும்மாளங்களுடன், பிரபுதேவா நடனங்களுடன், ஆபாச பாடல்களுடன் குடித்துவிட்ட போதை தலைக்கேறி வெறியாட்டம் ஆடினர். ஐஸ் அவுஸ் மசூதி அருகில் ஊர்வலத்தை மதியம் 3½ மணியிலிருந்து 5 மணி வரை நிறுத்தி கலவரத்தை ஏற்படுத்த முயன்றனர். தலித் மக்களோ, புரட்சியாளர்களோ, தொழிலாளிகளோ ஊர்வலத்தை 10 நிமிடங்கள் சாலையில் நிறுத்தினால் உடனே மிருகத்தனமாக தடியடி தாக்குதலை காக்கி சட்டைகள் நடத்துகின்றனர்! 1½ மணிகள் கடத்தும் கூட இந்து முன்னணி ரவுடிகளிடம் கமிஷனர் வைகுந்து முதல் அனைத்து போலீஸ் அதிகாரிகளும் கெஞ்சி கூத்தாடினர். சட்டவிரோத கும்பல்களுக்குத்தான் எத்தனை சலுகை!

ஆனால் இறுதியில் வேறுவழியின்றி செல்லமாக லேசான தடியடி நடத்தி ஊர்வலத்தை கலைத்தனர். இதுதான் சாக்கு என்று பாசிஸ்டுகளும், அவர்களின் ரவுடி பட்டாளமும் போலீசார் மீது எதிர் தாக்குதல்கள் நடத்தினர். வினாயகர் ஊர்வல வண்டி சக்கரத்தில் மாட்டி ஒரு போலிஸ்காரர் 'பரலோகம்' அடைந்ததால் வெறுப்படைந்து இருந்த போலிசார் கோபம் அடைந்தனர். தாங்களே சிலைகளை இழுத்துச் சென்று கடலில்

படிப்பகம்

www.padippakam.com



தள்ளினர்! இந்து முன்னணியினரையும், பக்த கோடிகளையும் பெரீனா கூட்டத்தில் தாக்கி ஓட ஓட விரட்டினர். அனைத்து பத்திரிக்கைகளும், கட்சிகளும் இந்து முன்னணியினர் வன்முறை செயல்களைக் கண்டித்தனர். சென்னை மக்கள் மத்தியில் இந்து முன்னணியினரின் பக்தி வேஷம் கிழிந்து பாசிச முகம் அம்பலப் பட்டு போனது.

இப்படி பாசிஸ்டுகளுக்கு எதிராக ஊர்வலம் முடிந்தாலும் கூட, வழக்கம்போல 'வன்முறைக்கு காரணம் இந்து விரோத சக்திகளே' என்று கோயபல்ஸ் புளுகை இராமகோபாலன் அவிழ்த்து விட்டான். ''நடுநிலை'' பத்திரிக்கைகளும் இதை எந்த கேள்விக்கும் உட்படுத்தாமல் பிரசுரித்தன. தொடர்ந்து டிசம்பர் 5 ஆம் தேதி கார்த்திகை தீப விழாவில் மதுரை திருப்பரங் குன்றத்தில் கலவரத்தை ஏற்படுத்த இந்து முன்னணி யினர் முயன்றனர். மக்களின் எதிர்ப்பு உணர்வால் இவர்களின் செயல்கள் முறியடிக்கப்பட்டது. இந்து முன்னணியினர் பக்தி உணர்வால் வினாயகர் ஊர்வலங்களை நடத்தவில்லை கார்த் திகை தீபத்தை ஏற்றவில்லை. கலவரங்களை, வன்முறைகளை ஏற்படுத்தி மக்களிடையே பிளவை உருவாக்கவே செய்கின்றனர் என்பது இன்று தமிழக மக்கள் நன்கு உணர்ந்துள்ளனர். நாமும் கூட பக்தி உணர்வை பாசிச இந்து வெறி பண்பாடாக மாற்ற முயல்வதைஅம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டும். அப்பொழுது தான் பாசிஸ்டுகளின் நோக்கங்களுக்கு சமாதி கட்ட முடியும்!

○ நடராசன்

---

## வாசகர் தளம்

**சேலம் ஆர். சக்தி வேல்:**

'பண்பாட்டு போராளிகள்' தொடர் சிறப்பாக இருந்தது, அட்டை முகப்பில் உள்ள படத்தின் கீழே உள்ள வாசகத்திற்கு புத்தகத்தின் உள்ளே எந்தவிதமான விளக்கமும் இல்லாதது குழப்பம் அடைய செய்கிறது. மேலும், பறை அடிப்பதே கேவலம் என்ற நிலை இருக்கும் போது, பறை அடிக்க மறுத்து கட்டை விரல் இழந்த தோழனை வேதனைப்படுத்தும் நோக்கில் விளக்கம் கூட சரியாக தராதது ஏன் என்று தெரியவில்லை... (ஆசிரியர் குழு மடலில் விளக்கம் உள்ளது) □

www.padippakam.com



**க. ராமேஸ்வரன், ஆத்தூர் வட்டம்:**

...இன்றைய கால கட்டத்தில் பண்பாட்டில் அடங்கிய பல்வேறு கூறுகளின் நிகழ்வு போக்கினையும், அவற்றின் வித்துக் களையும், நாம் கூர்மையாக வெளிக் கொணர வேண்டிய கட்டாயத்தினை பெற்று உள்ளோம். நம் இதழில் நுணுக்கமான விளக்கம் மேற்கண்டவைகளுக்கு அளிக்கவில்லை என நான் கருது கின்றேன். இன்று ஏகாதிபத்தியத்தின் பாசிச பண்பாடு எப்படி எல்லாம் பரவுகின்றன என்பதனை வெளிகொணரும் இடத்து, தற்போது அவற்றின் வளர்ச்சி நகர்புறத்தில் எப்படி உள்ளது; அதன் தாக்கம் கிராமங்களில் எப்படி உள்ளது என்று கணிப்பிட்டு அதற்கேற்றவாறு, இதழில் செய்திகளை வெளிப்படுத்த ஆயத்த மாக வேண்டும். ஒவ்வொரு சிறு பிரச்சனையும் மக்களை எவ் வாறு தாக்குகின்றன. அதில் ஏகாதிபத்தியத்தின் பங்கு என்ன? அதனை எதிர்கொள்ள எது சரியான யுக்தி என்று நாம் மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும்.

கிராமப்புறங்களில் இன்று பரவுகின்ற சீரழிவு பண்பாட் டிற்கு என்ன காரணம்? இதன் நிகழ்வு போக்கில் அவர்களும், அவர்களின் சந்ததியினரும் படும் இன்னல்கள், இவைகளை பல் வேறு வடிவங்களில் வெளிப்படுத்த வேண்டும்.

(நமது விருப்பமும், நோக்கமும் கூட இதுவே. இதற்கு வாசகர் களின் பங்களிப்புகள்,விமர்சனங்கள் அவசியம் என கருதுகிறோம். இவன்: ஆசிரியர் குழு)

**பி.சி. நல்லரசன், நடுவண் சிறை(தடா)சென்னை**

சிறைத் தோழர்கள் அனைவரும் படித்து பயன் அடைந் தோம். எங்களின் விரிவான தேடலுக்கு விடை தேடிக் கொண் டோம். மக்கள் பண்பாடு இதழ் மேலும் மேலும் வளர எனது புரட்சிகர வாழ்த்துக்கள்.

**பாலமுருகன், பாவானி**

இதழ் வெளிவருவது பெரும்பாலனவர்களுக்கு தெரியவே யில்லை என்பது துரதிஷ்டமானது. பரந்துபட்ட தளங்களை சென் றடையும்படி விநியோகம் முறை மாற்றம் செய்யப்பட வேண்டும் என்பது மிக முக்கியம். அரசியல் பேச வேறு இதழ்களை பயன் படுத்திக் கொண்டு, பண்பாட்டு தளத்திற்கு முழுக்க முக்கியத் துவம் தரவும்.

www.padippakam.com

# தோல்வியே வெற்றியின் தாயாகும்!

**செந்தாரகை**

கருப்புக் கோழி
குஞ்சுகள் பதிமூன்றோடு
கொத்தித் திரிந்தன!
சலங்கை ஒலியின்
சிறு சப்தமாய்
அவைகளின் குரல்கள் சங்கமம்!
வெள்ளை நிறமாய் மூன்று
சாம்பலும் கருப்புமாய் நான்கு;
பழுப்பு நிறத்தில் வெள்ளை
வண்ணம் புள்ளிகளாய் ஐந்து
பட்டும் படாத சிவப்பாய்
ஒன்று!
சிந்திக் கிடக்கும் தானியங்களை
சிறு பூச்சிகளை
தாய்ப்பறவை குஞ்சுகளுக்கு
பகிர்ந்து கொடுக்கும்
ஓய்வு நேரமாய்
நிழல் பாவிய இடங்களில்
சிறகுகளை விரித்து
உட்கார்ந்து கிடக்கும்?
இறக்கைக்குள்ளே இருந்து
சிலது எட்டிப் பார்க்கும்
ஒன்று அல்லது மூன்று
தாயின் மீது
அமர்ந்து குதிக்கும்!
சாம்பல் நிற கீரிப்பிள்ளை
இவைகளை ஒவ்வொன்றாக
வேட்டையாடி வந்தது.
மிஞ்சியிருப்பது நான்கு.
தாய்ப் பறவை
துயரத்தில் ஆழ்ந்தது!
மற்றக் கோழிகளுக்கும்
இந்த மாதிரியான் இழப்பு!
இந்த மாதிரியான துக்கம்!
புதருக்குள் ஒளிந்து வந்த
கீரிப்பிள்ளையை
கருப்புக் கோழி பார்த்து
விட்டது;
கத்தியது நெஞ்சம் கிழிய!
நான்கு திசைகளிலிருந்தும்
ஊர்க் கோழிகள்
குதித்தன போரில்!
பல்லை இளித்து சீறியது
கீரிப்பிள்ளை!
பத்துக் கணக்கான
கோழிகள் போரிட்டன
அஞ்சா நெஞ்சங்களாய்
அவைகள்?
கீரிப்பிள்ளைக்கு
உதிரம் கொட்டியது.
முகமெல்லாம் வெற்றிலைப்
பாக்கு எச்சில் மாதிரி
சோர்ந்து வீழ்ந்தது!
பார்வையை இழந்தது!
கோழிகள் தங்களின்
வெற்றிக் கொடியை
நிலை நாட்டியது!
கீரிப்பிள்ளையின்
ஆதிக்கம் தகர்ந்தது!
காட்சியைக் கண்ட
பொது மக்களும் என்
குழந்தைகளும்
கைக்கொட்டி சிரித்தார்கள்!
நிகழ்ச்சி என் கிராமத்து
வரலாற்றை நினைவூட்டியது!
என் குழந்தைகளுக்கு
எடுத்துரைத்தேன்!
நான் பிறந்த கிராமத்து
மக்களும்

www.padippakam.com



பிள்ளைகளை இழந்த
கோழிகளாய்
இப்படித்தான் வாழ்ந்தார்கள்
1947 லிருந்து 1952 வரை
கசாப்புக்கடை ஜீவகாருண்யம்
காந்தியம்
பொதுவுடமை வாதிகளை
ஈவி இரக்கமின்றி
வேட்டையாடிய காலமது
அடக்கு முறைக்கு அஞ்சாது
நிமிர்ந்து நின்ற தோள்கள்!
கிராமங்கள் தோறும்
விரைந்து சென்றன
காக்கிகளும் காதிகளும்
நான் பிறந்த கிராமத்தை
நோக்கிய நேரத்தில்
பல கிராமத்து மக்கள்
சுற்றி வளைத்தார்கள்!
காதிகளுக்கு ஆதரவாய்
காக்கிகளின் துப்பாக்கிகள்
குண்டுமாரி பொழிந்தன!
வீரத்தின் விளைநிலமாய்
மக்கள் போரிட்டார்கள்!
மக்கள் வெள்ளத்தோடு
மோத முடியாமல்
கதிர் குல்லாய்கள் பின்
வாங்கின!
காக்கிகள் சரணடைந்தன
மக்கள் செங்கொடியை
தங்களின் வெற்றிக் கொடியை
வானுலாவ பறக்க
விட்டார்கள்!
காதிகளின் காக்கிகளின்
ஆதிக்கம் தகர்ந்தது!
நோக்கும் திசையெல்லாம்
செங்கொடியைத் தவிர
வேறொன்று மில்லை!
உழைப்பவனுக்கே உலகம்
சொந்தம்''
என்ற பதாகையை
ஊரின் முகப்பில் கட்டினார்கள்

○

---

# மக்களின் எதிர்ப்பு இலக்கியம்

பத்துமா நிலத்திலயும் எங்கள
பயிர் நடச் சொன்னாக
பயிர் நட்டு முடிஞ்சதுமே எங்களப்
பஞ்சாயத்துக்கு வரசொன்னாக
வேனைக் கொண்டாந்து எங்கள
விரட்டியே அடித்தாலும்
வேனில் ஏறிடுவோம் — எங்க
வீரத்தை விடமாட்டோம்
சேலம் சிறைதனிலே எங்கள
பூட்டி முதல் போட்டாலும்
பூட்டை உடைத்திடுவோம்— எங்கள்
கொள்கைய விடமாட்டோம்

☐ மாரி; மாவிலங்கை கிராமம், இராமநாதபுரம் மாவட்டம்
சேகரித்தவர்: கே.ஏ. குணசேகரன்

(வாசகர்களும், நாட்டுபுற இலக்கிய ஆர்வலர்களும் தங்களுக்கு தெரிந்த, சேகரித்த மக்களின் பலவகை எதிர்ப்பு இலக்கியஙகளை எழுதி அனுப்பி உதவவும்: ஆசிரியர் குழு)

www.padippakam.com

## பண்பாட்டு போராளிகள்

# முதலிலிருந்து முடிவுவரை ஒரு புரட்சியாளர்

''அவர் தன் வாழ்க்கை முழுவதையும் புரட்சிகரப் பணிக்காக அர்ப்பணித்துக் கொண்டவர். அவருடைய கூர்மையான பேனா முனையைக் கண்டு அஞ்சாத பிற்போக்கு சக்திகளே கிடையாது...'' என்று இந்திய மக்களின் நேசத்திற்கும், அன்பிற்கும் உரிய மகத்தான தலைவர் சாருமஜீம்தார் ஒருவரை வானவிற்கு புகழ்ந்தார். அந்த பேனாவிற்கு சொந்தக்காரர், புகழ்ச்சிக்கு உரியவர்தான் வங்கம் தந்த தங்கம் தோழர் சரோஜ்தத்தா!

இவர், இ.க.க (மா.லெ) அமைப்பின் தலைவர் என்ற முறையில் நாடு முழுவதும், உலகம் முழுவதும் புகழ் பெற்றவர். இவர் மையக் குழுவின் உறுப்பினராகவும், கட்சியின் மேற்கு வங்காளம் மாநிலத்தின் செயலாளராகவும், கட்சியின் வங்காள மொழி இதழான ''தேஷ்பாரதி''யின் ஆசிரியராகவும் விளங்கினார். சனநாயக பண்பாடு பற்றிய கட்சியின் கொள்கையாளராகவும் இவர் இருந்தார். இவருடைய படைப்புகள், வங்காளத்தில் 19-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட மறுமலர்ச்சி பற்றிய கருத்துகளை மறு ஆய்வு செய்ய வைத்தது. இந்த வங்க மறுமலர்ச்சியைத்தான், பின்னர் வெறும் புரளி என்று தலை சிறந்த இலக்கிய விமர்சகரும், ஆய்வாளருமான பினாய்கோஷ் உறுதிப்படுத்தினார்.

1939-ஆம் ஆண்டில் பொதுவுடமைக் கட்சி சட்ட விரோதமானது என்று ஆங்கில ஏகாதிபத்தியம் அறிவிப்பு செய்தது. அப்பொழுது தோழர் ப்ரபுல்லராய் அவர்களால் நடத்தப்பட்ட ''அக்ராணி'' இதழுடன் தன்னை இணைத்து கொண்டு ஒரு புரட்சிகர எழுத்தாளராக சரோஜ்தத்தா தன் வாழ்க்கையைத் துவக்கினார். 1938, டிசம்பர் மாதம் அகில இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் இரண்டாவது மாநாடு கல்கத்தாவில் உள்ள அஹீடோஷ் கல்லூரியில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் புத்ததேவ்பாசு என்பவர் ''இன்றைய வங்காள இலக்கியமும் நவீன எழுத்தாளர்களின் நிலையும்'' என்ற கட்டுரையை வாசித்தார். ''அக்ராணி'' இரண்டாவது இதழில்

www.padippakam.com



சரோஜ், ''சின்னாகரோ சத்மாவேஷ்'' (முகமூடியைக் கிழித்தெறி) என்ற கட்டுரையை எழுதினார். அதில புத்ததேவ் பாசுவின் தனிமனித நிலையை முழுமையாக அம்பலப்படுத்திய தோடு, போலி முற்போக்கு வார்த்தை ஜாலங்களைக் கொண்டு, தங்களின் இழிந்த தரத்தை மறைத்துக் கொண்டு மற்றவர்களைப் பார்த்து, உலகை மாற்ற இதுதான் சரியான நேரம் என்று அழைப்பு விடுத்துக் கொண்டிருந்தவர்களின் முகமூடியைக் கிழித் தெறிந்தார். இந்த கட்டுரை, புரட்சிகர அறிவுஜீவிகளிடம் மிகுந்த உற்சாகத்தை ஏற்படுத்தியது. இன்னும் சொல்லப் போனால், அது பரிக்ஷை குழுவைச் சேர்ந்த ''உயர்குடி கம்யூனிஸ்டுகளுக்கு'' வெளிப்படையான ஒரு சவாலாகவே அமைந்தது.

''வெறும் உணர்ச்சிபூர்வமான கம்யூனிஸ்டுகள் உண்மை யான கம்யூனிஸ்டுகளாக இருக்க முடியுமா? தரம் தாழ்ந்த இலக்கியவாதிகளுக்கு ஆதரவாக'' என்ற கவிஞர் சமார்சென்னின் கட்டுரைக்கு பதிலடியாக, ''அதி நவீன வங்காள கவிதை'' என்ற புகழ் பெற்ற சரோஜ்தத்தாவின் கட்டுரை ''அக்ரானி'' இதழில் 1940 ஏப்ரலில் இடம் பெற்றது. இதே இதழில் 1940 மே மாதம் சமார்சென்னின் பதில் அதே தலைப்பில் இடம் பெற்றது. அதற்கு சரோஜ்தத்தாவின் பதிலுரையும், அதே இதழில் அதே பெயரில் இடம் பெற்றது. முற்போக்கு என்ற பெயரில் போலி இலக்கி யத்தை தூக்கிப் பிடித்த சமார்சென்னையும், புத்த தேவ்பாசுவை யும் இக்கட்டுரை அம்பலப்படுத்தியது. அந்தக் கட்டுரையில் இடம் பெற்ற ஒரு வரி இன்னும் நினைவிருக்கிறது. ''அறிவுஜீவி களின் மோசமான சேர்க்கையைப் பற்றி உணர்ந்து கொள்ளக் கூடிய நாள் கம்யூனிஸ்டுகளுக்கு வந்து விட்டது'' இந்த மூன்று கட்டுரைகளும் வங்காளத்தில் முதலில் மார்க்சிய இலக்கிய சர்ச்சையைத் துவக்கி வைத்தன.

கவிஞர் சமார் சென்னை ஆசிரியராக கொண்டு, வெளி வந்து கொண்டிருந்த ''பிராண்டியர்'' இதழ் 1977 ஆம் ஆண்டு சரோஜின், ''அதிநவீன வங்காளக் கவிதை'' என்ற கட்டுரையை மறு ஆய்வு செய்து இப்படி எழுதியது. ''நீண்ட நாட்களுக்குப் பின் இந்தக் கட்டுரையைப் படிக்கும் பொழுது, சரோஜ் சொன்னது சரியாகவே படுகிறது. 30களில் பல கவிஞர்கள், புகழுக்காக தங்களைப் புரட்சியாளர்களாகக் காட்டிக் கொண்டனர். சரோஜ் அவர்களை முழுமையாக அம்பலப்படுத்தி னார்'' என்றது.

www.padippakam.com



ஜெஸ்ஸீர் மாவட்டத்தில் உள்ள நரைல் கிராமத்தில் சரோஜ்தத்தா பிறந்தார். அவர் தந்தை நடுத்தரவர்க்கத்தைச் சேர்ந்தவர். வித்தியாசமானவர். சந்தைக்குப் போகும் போது வேலைக்காரனோடு போனாலும், மகன் தன் தலையில் அரிசிச் சாக்கைத் தூக்கி வருவதை கேவலமாகக் கருதாதவர். அரிசிச் சாக்கை தலையில் வைத்தன் மூலம் சரோஜின் தந்தை, இளமையிலேயே சாதாரண மக்களின் வாழ்க்கைப் பாதையில் அவரைச் செலுத்தினார். அதே சமயம், அவர் பள்ளியிலும், கல்லூரியிலும் சிறந்த மாணவராக விளங்கினார்.

1942-யில் 'அக்ரானி' இதழின் ஆசிரியரை போலிஸ் விரட்டியதால் அது மூடப்பட்டது. ''அரானி'' இதழ் சத்யேந்திரநாத் மஜீம்தாரை ஆசிரியராகக் கொண்டு வெளி வந்தது. சரோஜ்தத்தாவும், பினாய் கோஷ்யும் அந்த இதழின் மிகப் பெரிய ஈர்ப்பு சக்தியாக மாறினர். அதற்குள்ளாக சரோஜ் தன்னை ஒரு தலைசிறந்த கவிஞராக நிலைப்படுத்திக் கொண்டு விட்டார். ரொமெயின் ரோலண்டின் ''நான் ஓய்வு கொள்ள போவதில்லை'' என்ற அவருடைய மொழியாக்கக் கவிதை பெரிதும் பாராட்டப்பட்டது. இந்தியா மற்றும் உலக நாடுகளின் செவ்வியல், நவீன இலக்கியங்கள் பற்றி அவர் நன்கு அறிந்து இருந்தார். அவர் ''அமிர்த பஜார்'' இதழில் இணைந்து அதில் துணை ஆசிரியராக பணியாற்றி வந்தார்.

அப்பொழுது, ''ஜீகாந்தர்'', ''அமிர்த பசார்'' ஆகிய இதழ்களின் அச்சக ஊழியர்கள் இரண்டு சங்கங்களைக் கொண்டிருந்தனர். அதில் அச்சக ஊழியர்கள் மட்டுமே உறுப்பினர்களாக இருக்க அனுமதிக்கப்பட்டனர். பத்திரிக்கை யாளர்களும், எழுத்தாளர்களும் அதில் சேர அனுமதிக்கப்படவும் இல்லை. அவர்கள் அதில் சேர விரும்பவும் இல்லை. குறிப்பாக சரோஜ்தத்தா, ஹரிபாடோ சௌதரி, சந்தோஷ் தேவ், குலேன் பால் ஆகியோரின் முன்முயற்சியால், 1945-யில் ஒரு கூட்டுச் சங்கம் உருவானது. 1945-யில் முதல் வேலை நிறுத்தம் துவங்கப்பட்ட போது, மக்கள் ஒரு புதிய சரோஜ்தத்தாவைக் கண்டனர். தலையில் அரிசி மூட்டையைச் சுமந்த சிறுவன் முதல் நாளே தொழிலாளர்களுள் ஒருவனாக மாறி விட்டான்.

நாட்டில் பிரிவினை ஏற்பட்டு, கலவரங்களுக்கிடையே சுதந்திரம் என்று சொல்லப்படுகிற ஒன்று ஏற்பட்டபோது, மலிவான கூலிக்கு தொழிலாளர்கள் தொடர்ந்து நிறையக் கிடைத்ததனால், பத்திரிக்கை உரிமையாளர், ஊழியர்களின்

படிப்பகம்

www.padippakam.com



சம்பளங்களைக் குறைக்க ஆரம்பித்தனர். மீண்டும் வேலை நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. கூலிப்பட்டாளம், காவல் துறை, முகமேயற்ற தொழிற்சங்கத் தலைவர்கள் ஆகியோரின் உதவி யோடு நிர்வாகம் தொழிலாளர்களின் மீது அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டது. இந்த வேலைநிறுத்தம் நான்கு மாதங்கள் நீடித்தது. ஆனால், கடைசித் தொழிலாளி முதல் உயர்ந்த பத்திரிகையாளர் வரை யாரும் மன உறுதியோ, உற்சாகமோ குன்றவில்லை. அனைவரையும், உற்சாகப்படுத்தியபடி புன்னகை யுடன் சரோஜ்தத்தா அவர்களுடையே எப்போதும் இருந்தார். ஆனால் வேலை நிறுத்தம் உடைக்கப்பட்டது. பலர் வேலை இழந்தனர்.

அப்போது முதல் சரோஜ்தத்தாவிடம் ஒரு மாற்றம் தென் பட ஆரம்பித்தது. முதலில், மற்ற அறிவுஜீவிகளைப் போலவே, புகழ் பெற்றவர்களைச் சந்தித்து வந்தார். வேலைநிறுத்தம் முடிந்தபிறகு, அவர் முழுதும் ''கட்சி ஈடுபட்டுள்ளவராக'' மாறி விட்டார். அவர் கட்சியின் முழுநேரப் பணியாளராகச் சேர்ந்து, ''பரிக்ஷை'' யின் ஆசிரியரானார். அது சூடான அரசியலுக்கு களமானது. கைது வாரண்டைத் தொடர்ந்து அவர் தலைமறை வானார்.

1950 இல் ''சுவ ஜீனதா'' இதழ் மீண்டும் வெளி வந்தது. சரோஜ் அதன் ஆசிரியர் குழுவில் இடம் பெற்றார். கட்சியில் அரசியல் சர்ச்சை நடைபெற்று வந்தது. சுவஜீனதாவின் பணி யாளர்கள் இரண்டு குழுக்களாகப் பிரிந்து நின்றனர். சரோஜ் தத்தா தலைமையிடம் நம்பிக்கையை இழந்துகொண்டிருந்தார். காலனிய, புதுக்காலனிய நாட்டு மக்களின் உண்மையான பிரதி நிதியாக அவர் தோழர் மாசேதுங்கைக் கண்டார். அவர் தன் நண்பர் பிமல் சந்திர கோஷைக் கொண்டு ''மாசேதுங் நீ ஆசியா முழுவதையும் உறக்கத்திலிருந்து எழுப்பிவிட்டாய்'' என்ற புகழ் பெற்ற கட்டுரையை எழுத வைத்தார்.

கம்யூனிஸ்ட் கட்சிக்குள் மாவோ எதிர்ப்புச் சக்திகள் வலுவாக இருந்தன. குருச்சேவின் அறிக்கை கட்சியை இரண் டாகப் பிரித்தது. இந்தியாவின் சீன யுத்தமானது கட்சியை உடைத்தது. நேரு அரசாங்கம் பொதுவுடைமையாளர்களைச் சிறையில் அடைத்தது.

சிறையில் இருந்து வெளிவந்த சரோஜ்தத்தா 'மார்க்சிஸ்ட்' என்ற பெயர்ப் பலகையோடு இருந்த புதிய கட்சியில் சேர்ந்தார்.

www.padippakam.com



பெண்கள் பள்ளி ஒன்றில் ஆசிரியராகச் சேர்ந்தார். இந்த வேலையில் அதிக ஆண்டுகள் நீடிக்கவில்லை. 1964 இல் தான் இன்னொரு திரிபுவாதக் கட்சியில் இருப்பதை உணர்ந்த சாரு மஜீம்தார், வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த "எட்டு ஆவணங்களை" தொகுத்து வெளியிட்டார். 1967 இல் ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்தது. தராய் கூலி உழவர்கள் தங்கள் கனவுகளுக்கு உருவம் கொடுக்க முன் வந்தனர். "நக்சல்பாரி' — மாசேதுங் சிந்தனையை முதன் முதலாக இந்தியாவில் தெளிவாக, உணர்வாகவும் அமுல்படுத்தி" புரட்சிகரப் போராட்டத்தில் புதிய வரலாற்றை உருவாக்கியது. கூலி உழவர்களைக் கொல்வதில் நாங்கள் ஒன்றும் காங்கிரசு கட்சிக்கு சளைத்தவர்கள் அல்ல என்று "மார்க்சிஸ்ட்" கட்சியினர் நிருபித்தனர்.

மாகாணக் குழுவில் உறுப்பினராக இருந்த சரோஜ்தத்தா, கட்சித் தலைமைக்கு எதிராக கலகக் குரல் எழுப்பி, புரட்சியாளர்களுடன் சேர்ந்து கொண்டார் அப்போது அவர் அறுபது வயதை நெருங்கிக் கொண்டிருந்தார். இ. பொ. க. (மா-லெ) அமைப்பின் நிறுவன உறுப்பினரானார். மார்க்சிஸ்ட் கட்சியின் திரிபுவாதத் தகிடுதத்தங்களை தனது பேனாவின் கூர்முனையைக் கொண்டு கிழித்தெறிந்தார். நக்சல்பாரி கட்சியின் அமைப்பாளராகவும், தலைவராகவும், தத்துவவாதியாகவும் விளங்கினார். கட்சியின் அழைப்பிற்கு இணங்க மீண்டும் தலைமறைவானார்.

"தேஷ் பாரதி" இதழில் தலையங்கம் மட்டும் அல்லாமல் 'பத்ரிகார் துனியா' என்ற தலைப்பில் "சசாங்கா" என்ற புனைப்பெயரில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதி வந்தார். மையக்குழு பத்திரிக்கையின் ஆசிரியர் குழுவில் இருந்தார். தனது வாழ்வின் இறுதி மூச்சு வரைத் திரிபுவாதத்தை எதிர்த்துப் போரிட்டார். நக்சல்பாரி கட்சிக்குள் இருந்த திரிபுவாதிகள், சாருமஜீம்தாரின் தலைமையைத் தாக்க ஆரம்பித்தபோது, சரோஜ்தத்தா அவர்களையும் எதிர்த்துப் போராடினார். சொல்லுக்கும், செயலுக்கும் எந்த வித்தியாசமின்றி வாழ்ந்தார்.

பிற்போக்குவாதிகளுக்கும், திரிபுவாதிகளுக்கும சிம்மசொப்பனமாக இருந்தார். அதனால் சரோஜ்தத்தாவை 1971 ஆகஸ்டு 5 ஆம் தேதி அன்று இரவு, காவல் துறையினர் தெற்கு கல்கத்தாவில் ஒரு வீட்டில் இருந்து பிடித்துச் சென்றனர்.

ம—2

www.padippakam.com



63 வயதிற்கும் அதிகமாகி இருந்த இந்த முதிர்ந்த தோழரை சி. பி எம் அரசினர் ஒரு கண்துடைப்பு விசாரணைக்குக்கூட உட்படுத்த தைரியமில்லை. அவர்கள், அவரை அந்த இரவில் கல்கத்தா மைதானத்தில் சுட்டுக் கொன்றனர்.

அவரின் தியாக மரணத்திற்குப் பிறகு சாரு இவ்வாறு எழுதினார். ''ஒரு தலைவனைப் போலவே, ஒரு வீரனின் மரணத்தை அவர் சந்தித்தார். இளைஞர்கள் இந்தப் புரட்சி நாயகனை தங்கள் உதாரணமாகக் கொண்டு, பலவீனங்களை உடைத்தெறிந்து புரட்சிகரப் பாதையை மேலும் உறுதியோடு ஏற்றுக் கொள்ளவேண்டும்.''

கவிஞரும், இலக்கிய விமர்சகரும், மக்கள் ஊழியரும், மாபெரும் கம்யூனிசத் தலைவருமான சரோஜ்தத்தா எப்போதும் சுயநலமாய் இருந்தது இல்லை. அவரின் வாழ்க்கை முழுவதும் புரட்சிக்காக அர்ப்பணிக்கப்பட்டது. உணர்வுள்ள இந்திய மக்களுக்கு, சரோஜ்தத்தா ஒரு உதாரண மனிதரின் பெயர், மனிதாபிமானம் மற்றும் சுய தியாகத்தின் சின்னம்! புரட்சிகர மக்களின், பண்பாட்டு போராளிகளின் முன் எரிந்து கொண்டிருக்கும் தீப்பந்தம். ஆம்! வர்க்கப் போராட்டத்தில் மக்கள் திரளுடனான முழுமையான ஒற்றுமையின் மாபெரும் சின்னம் சரோஜ்தத்தா!!

ஆங்கிலம் : **கஞ்சன்குமார்**

தமிழாக்கம் : **விஜயகுமார்**

---

## 'பயங்கரவாதி!'

○ அவன் வரும்போது
ஆயுதபாணியாய்
ஆயிரம் காவலர்
சக்கர வியூகமாய்;
அந்தப் பகுதிக்கு
பொதுமக்கள் அனுமதியில்லை.
விமான நிலையத்தில் தடுப்பு
ஈ. காக்கைக்கூட பறக்கக்
கூடாது.
போலீஸ் புடைசூழ
சிலை திறப்பு...

○ மக்களோடு
நடுரோட்டில்...
வயல்வெளியில்
கடும் உழைப்பாளர்களோடு
இவர்...
'பயங்கரவாதி!'

**தோழன்**, சேலம்.

www.padippakam.com

ஏறி மேயுதடா ஏகாதிபத்தியம் :

# சின்னத் திரை மூலம் எண்ண உருவாக்கம்

கோ. கேசவன்

மண்ணுலகக் காட்சிஎலாம் மற்றிங்கு இருந்தபடி
கண்ணுக்கு எதிரிலே காணலாம்..

எனப் பாரதிதாசன் பாடினான். ஆம்! சின்னத்திரை எனச் செல்லமாகப் பத்திரிகைகள் வருணிக்கும் தொலைக்காட்சி என்ற மின்னணுவியல் ஊடகத்தின் மூலம் இது சாத்தியமாகிவிட்டது. ஒலியோடு ஒளிப்படங்களைக் காந்த அலைகள் மூலம் ஓரிடத்தில் இருந்து அனுப்பி, வேண்டிய இடத்தில் தொலைக்காட்சிப் பெட்டிகள் மூலம் பெறுவதே தொலைக்காட்சியாகும். இது மனித குலத்தின் அறிவியல் சாதனை என்பதில் ஐயமில்லை.

இதன் மூலம் உலகில் நடக்கும் எந்தவொரு நிகழ்ச்சியையும் அது நடந்து கொண்டிருக்கும் அந்தக் கணத்திலேயே அப்படியே காணலாம்; கேட்கலாம். ஹிலாரி கிளிண்டன் பெய்ஜிங்கில் பெண்கள் மாநாட்டில் பேசுவதாயிருப்பினும் அதை எதிர்த்துப் பல பெண்கள் ஆர்ப்பாட்டம் செய்வதாயினும் அவற்றைக் காணலாம்; பஞ்சாயத்துராஜ் மாநாட்டில் நரசிம்மராவ் கொட்டாவி விடுவதாயினும் சங்கர் தயாள்சர்மா நடக்கமுடியாமல் தள்ளாடிக் கீழே விழுவதாயினும் அவற்றை அப்படியே காணலாம். இங்கிலாந்து நாட்டு அறிஞர் ஜான்பெயர்டு கண்டறிந்த சாதனையின் வளர்நிலையே இதுவாகும்.

எந்தவோர் அறிவியல் கண்டுபிடிப்பும் முதலாளியஉற்பத்தி முறைக்கு உகந்தவிதத்தில் தகவமைக்கப்பட்டு வளர்க்கப்படுகிறது. பல்வேறு மக்களை உடனடியாகச் சென்றடையக் கூடிய மக்கள் திரள் ஊடகங்களில் ஒன்றான தொலைக் காட்சியையும் இரண்டு விதங்களில் முதலாளிகள் பயன்படுத்திக் கொள்கின்றனர். ஒன்று பொருளாதார இலாபம்; இன்னொன்று, முதலாளியத்துக்கு உகந்த பண்பாட்டு உருவாக்கம்.

www.padippakam.com



இன்றைக்கு உலக நாடுகளில் குவிக்கப்பட்டுள்ள மூலதன் அளவையும் தன்மையையும் கண்டால் அவற்றில் அமெரிக்காவும் ஜப்பானும் போட்டி போட்டுக்கொண்டு முதல் இரண்டு இடங்களைப் பிடித்துக் கொண்டு வருகின்றன. இவை இரண்டும் தகவல் தொடர்பு சாதனத் துறையிலும் நிரம்ப முதலீடு செய்து பெரும் இலாபம் ஈட்டிக் கொண்டு இருக்கின்றன. குறிப்பாக அமெரிக்காவின் செல்வப் பகுதியாக விளங்கும் வடஅமெரிக்க முதலாளிகளில் ஐந்தில் ஒரு பகுதியினர் வெகுசனத் தகவல் தொடர்பு சாதனங்கள் மூலமே செல்வம் ஈட்டுகின்றனர். இந்த விகிதம் பெருகிக் கொண்டே போவதைக் காணலாம். மிக அதிகம் செல்வம் படைத்த முதல் 400 அமெரிக்க முதலாளிகளில் 1982இல் 9.5 சதவீதம் பேர்கள் தகவல் தொடர்பு சாதனங்களின் மூலம் செல்வம் ஈட்டினர்; ஆனால் 1989இல் இது 18 சதவீதமாக உயர்ந்து விட்டதாக ஒரு குறிப்பு கூறுகிறது. அமெரிக்கா மட்டு மல்ல ஒவ்வொரு நாட்டிலும் உள்ள முதலாளிகளுக்கு இன்றைக்கு இத்துறை கொழுத்த வேட்டைக்காடாகவுள்ளது. 1957இல் சோதனையாக ஒளிபரப்பிய இந்தியத் தொலைக்காட்சியில் 1976 முதல் விளம்பரங்கள் அனுமதிக்கப்பட்டன. இது முதற்கொண்டு இதன் இலாபம் அபரிமிதமானது. கடந்த பத்தாண்டுகளில் (1984—1994) மட்டும் இலாபம் 13 மடங்கு பெருத்துள்ளது. இன்றைக்கு 1994—1995இல் தொலைக்காட்சி விளம்பரங்களின் மூலம் இந்திய அரசுக்கு உரிய வருமானம் ஏறத்தாழ ரூ. 500 கோடியாகும். பொருளாதாரத் தாராளமயமாக்கல் என்ற பெயரில் அனைத்தையும் தனியார் துறைக்குத் தாரை வார்க்கும் திட்டத்தின் அடிப்படையில் இதிலும் தனியார் துறையை அனு மதித்தபின், தனிப்பட்ட முதலாளிகளும் இதில் நுழைந்து செல்வம் குவிக்கத் தொடங்கிவிட்டனர். தமிழில் புகழ்பெற்ற சன் தொலைக்காட்சி நிறுவனத்துக்கு மட்டும் ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 7 கோடி ரூபாய் கிடைப்பதாக ஒரு குறிப்பு கூறுகிறது.

கோயில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது பழைய பாடல். இன்றைக்கு தொலைக்காட்சிப் பெட்டி இல்லா வீட்டில் குடியிருக்க வேண்டாம் என்பது புதிய கவிதை ஆகும். இன்றைக்கு இந்தியாவில் மட்டும் ஏறத்தாழ 6 கோடி தொலைக்காட்சிப் பெட்டிகள் உள்ளன எனத் தெரிகிறது அதாவது இந்திய நாட்டு மக்கள் தொகையோடு ஒப்பிட்டுக் காணும்பொழுது சராசரி 15 நபர்களுக்கு 1 தொலைக்காட்சிப் பெட்டி உள்ளது. பெரு நகரங்களில் தொலைக்காட்சிப் பெட்டிகளின் இருப்பு குவிந்துள்ள தெனினும் சிறு நகரங்களிலும் கிராமங்களிலும்கூட பரவலாக

www.padippakam.com



நிறைந்துள்ளது. தில்லி, கல்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய பெருநகரங்களில் ஏறத்தாழ 70 லட்சம் பெட்டிகள் உள்ளனவாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவை தவிர ஏனையவை சிறு நகரங்களிலும் கிராமங்களிலும் உள்ளன. சாலைகள் சரிவர இல்லாத ஊரை பார்க்கலாம்; குடிதண்ணீரே கிடைக்காத கிராமங்கள் பலவுண்டு. ஆனால் தொலைக்காட்சி நிலைமை அப்படி இல்லை. இந்தியாவின் 75 சதவீதம் பகுதிகளில் வாழ்க்கை நடத்தும் மக்கள் தொகையில் 90 சதவீதம் பேருக்கு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் காண இன்றைக்கு வசதி செய்யப்பட்டுள்ளது. இந்த நூற்றாண்டு முடிவதற்குள் **இந்தியா முழுவதும் இந்தியர் எல்லோர்க்கும்** இது விரிவாக்கப்பட்டு விடும். பிறகென்ன கவலை? பங்கெடுப்பதற்கு பஞ்சாயத்துராஜ்யமும், பார்ப்பதற்குத் தொலைக்காட்சியும் இருக்கும்பொழுது பிறகென்ன கவலை?

இத்தகையக் குறுகிய காலப் பெருக்கம் குறிப்பிடத்தக்கதாகும். இதோடு மட்டுமின்றி தொலைக்காட்சியின் அடிப்படையில் உள்ளார்ந்து செயல்படும் நோக்கமும் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். சின்னத் திரையைக் கண்டு கேட்டு களிப்புறும் மக்களின் சிந்தனைகள் செதுக்கப்படுகின்றன. தொலைக்காட்சி தொழில் நுட்ப வளர்ச்சியைப் பயன்படுத்தி ஏகாதிபத்தியம் கலாச்சார தளத்தில் மூளைச் சலவை செய்து கொண்டு இருக்கிறது.

மூன்றாம் உலக நாடுகளில் 'சனநாயக ரீதியில்' தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்களை பயங்கரவாதம் அச்சுறுத்திக் கொண்டிருப்பதாக ஏகாதிபத்தியம் பயமுறுத்திக் கொண்டிருக்கிறது. இது உண்மையைத் தலைகீழாகக் குறிப்பிடுவதாகும். உண்மையில் சொல்லப் போனால் ஏகாதிபத்திய அரசாங்கங்களும் அதன் சார்பு நிலையிலான மூன்றாம் உலக நாடுகளின் அரசாங்கங்களும் பயங்கரவாதத்தை மக்கள் மீது பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம் ஆகிய மூன்று தளங்களிலும் இன்றைக்கு மக்கள் மீது பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்படுகின்றது.

- மூன்றாம் உலக நாடுகளின் சமூக இயக்கங்களையும் தமக்கு முழு அளவில் ஒத்துழைக்காத அரசாங்கங்களையும் அழித்து, குடியுரிமை சமூகத்தை சின்னாபின்னமாக்க ஏகாதிபத்திய சக்திகள் மிகவும் கவனத்தோடு முயற்சி செய்கின்றன. இதை **அரசியல் பயங்கரவாதம்** எனலாம்.

படிப்பகம்

- ஏகாதிபத்திய நாடுகள், அனைத்து நாடுகளின் செலாவணி மையம் (IMF), உலக வங்கி ஆகியவற்றின் மூலமும் காட் ஒப்பந்தம் போன்ற சமனற்ற ஒப்பந்தங்களின் மூலமும் மூன்றாம் உலக நாடுகளின் உள்நாட்டுக் கனி வளங்களையும் உடல் மற்றும் சிந்தனை உழைப்பையும் தமக்குகந்த விதத்தில் சுரண்டுகின்றன. இதைப் **பொருளாதாரப் பயங்கரவாதம்** எனலாம்.

- ஏகாதிபத்திய நாடுகள் தாங்கள் கட்டுப்படுத்துகிற கலாச்சார ஊடகங்கள் மூலம், மூன்றாம் உலக நாடுகளின் மக்களின் தேசியப் பண்பாட்டு உணர்வுகளை அழித்து சுய அடையாளத்தை இழந்துபோகும் நிலைச்கு மக்களை ஆழ்த்தி விட முயல்கின்றன. இதைக் **கலாச்சார பயங்கரவாதம்** எனலாம்.

ஏகாதிபத்தியம் உருவாக்கும் இத்தகைய பயங்கரவாதங்கள் நவீனத்துவப் போர்வையில் மூன்றாம் உலக நாடுகளைத் தாக்குகின்றன. இவற்றுள் கலாச்சார பயங்கர வாதம் குறிப்பிடத் தக்கதாகும். இது இரண்டு விதங்களில் செயல்படுகிறது.

1. ஏகாதிபத்தியப் பொருள்களுக்கான சந்தையைப் பிடிப்பதற்கு உகந்தவிதத்தில் நுகர்வுக் கலாச்சாரம் உருவாக்கப்படுகிறது.

2. ஏகாதிபத்திய அரசியலையும் பொருளாதாரத்தையும் சிந்தனை அளவில் ஏற்கத் தகுந்த கருத்துருவாக்கம் நிகழ்கிறது.

இன்றைக்கு மூன்றாம் உலக நாடுகள் ஏகாதிபத்திய நாடுகளின் உற்பத்தி பொருள்களுக்கான சந்தையாக அகலத் திறந்து வருகிற பொழுது, பொருள்களுக்கு இடையில் போட்டி தவிர்க்க இயலாததாகி விடுகிறது. சந்தையை உருவாக்கவும் உருவாக்கிய சந்தையைத் தக்க வைப்பதற்கும் விளம்பரங்கள் தேவைப்படுகின்றன. பத்திரிகை, வானொலி ஆகிய ஊடகங்களில் வரும் விளம்பரங்களை விட தொலைக்காட்சியின் வழியாக அசையும் பிம்பங்களின் வழியே ஒலியோடு வரும் விளம்பரங்கள் இதற்குப் பயன்படுகின்றன. இங்கு மக்களின் பயன்பாட்டு அடிப்படையில் தேவைகள் உருவாக்கப்படுவதில்லை. தொடர்பு சாதனங்களே தேவைகளை உருவாக்குகின்றன. உருவாக்கப்பட்ட தேவைகளிலிருந்து மக்கள் விலகி விடாமல் இருக்க விளம்பரங்கள் பயன்படு

www.padippakam.com



கின்றன. இது மட்டுமின்றி பொருளின் உண்மைத் தன்மையை நுகர்வோர் உணரவிடாமல் விளம்பரங்கள் தடுக்கின்றன. பொருள்களைப் பற்றிய புனைவுகளும் அதீத மதிப்பீடுகளும் நமக்குள் உருவாக்கப்படுகின்றன. நாம் ஏன் 'சிந்தால் சோப்பை' உபயோகிக்க வேண்டும் என்பதற்கு நமது தேவையோ, சிந்தால் சோப்பின் தரமோ அடிப்படையாக அமையாமல், சிந்தால் சோப்பின் விளம்பரமே அடிப்படையாக அமைந்து விடுகின்றது. நுகர் பொருள்களை மக்கள் ஏற்கத் தகுந்த விதத்தில் பொருள்களின் பெயர்கள் திரும்பத் திரும்ப அழுத்தமாக வலியுறுத்தப்படுகின்றன. நிர்மா சோப் தூள் விளம்பரத்தில் 'நிர்மா நிர்மா நிர்மா' எனத் தொடர்ந்து கூறப்படுவதைக் கூர்ந்து கவனிக்கும் ஒரு குழந்தை, பின்னர் அந்த விளம்பரம் மீண்டும் காட்டத் தொடங்கும் பொழுதே, தன்னையறியாமலே அந்த வரிகளை முணுமுணுக்கத் தொடங்கி விடுகிறது. உண்மையைப் போல நம்ப வைக்கக் கூடிய புனைவுகள் புனைந்து வலியுறுத்தப்படுகின்றன. ஒரு நடன நடிகை சரிவர நடனம் ஆட இயலாமல் போன பின்னர், பைவ்ஸ்டார் மிட்டாய் சாப்பிடுகிறாள். பிறகு நம்பிக்கை வந்து விடுகிறது, நன்கு ஆடுகிறாளாம். பைவ் ஸ்டார் மிட்டாய் சாப்பிட்டால் நம்பிக்கை வருமாம். இந்த விளம்பரங்கள் புதிய வாழ்க்கை முறையை உருவாக்கத் தூண்டுகிறது. வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, சலவை இயந்திரம் வைத்திருக்கும் குடும்பங்கள்; ரேமாண்ட் ஆடை அணிந்து பளபளக்கும் கைனடிக் ஹோண்டாவில் சவாரி செய்து வில்ட்டெஜ் பிளேடில் சவரம் செய்து எச். எம். டி., கைக் கடிகாரம் அணிந்து வரும் ஆண்கள்; டாடா சாம்பு போட்டு பளபளக்கும் கூந்தல் உடைய பெண்கள்; ஆகியோரே இலட்சியக் குடும்பங்களாகவும் இலட்சிய ஆடவராகவும் பெண்டிராகவும் சித்திரிக்கப்படுகின்றனர். வெகுசன தொடர்பு ஊடகங்கள் மூலம் மக்களிடத்தில் செல்வாக்கு பெற்றுள்ள நபர்கள், பிற துறைகளில் முன்னணியில் திகழக் கூடிய நபர்கள் ஆகியோரைக் கொண்டு பொருள்களை விளம்பரம் செய்யும் உத்தியும் கையாளப் படுகின்றது. மக்களிடத்தில் பல்வேறு விதங்களில் பிரபலமானவர்கள் பயன்படுத்துவதாகக் குறிப்பிடும் பொருள்களைத் தாங்களும் பயன்படுத்தினால் அத்தகைய பிரபலங்களுக்கு நிகராகத் தங்களைத் தாங்களே கருதிக் கொள்ளும் போலி நிறைவு மக்களிடத்தில் குவிந்திருப்பதால் இந்த உத்தி பயன்படுத்தப்படுகிறது. தகவல் தொடர்பு சாதனங்களின் ஆணைகட்டு ஏற்பத் தனிநபர் உணர்வுகள் மாற்றியமைக்கப் படுதலே இங்கு குறிப்பிடத் தக்க அம்சம் ஆகும்.

www.padippakam.com



இன்றைய சமூகத்தில் ஏகாதிபத்தியச் சுரண்டலால் மூன்றாம் உலக மக்கள் அவதியுற்று வருகின்றனர்; முதலாளியக் கொடூரங்கள் தலை விரித்தாடுகின்றன. அதே நேரத்தில் தடையற்ற சந்தை, கட்டுப்பாடற்ற பொருளாதாரம், தாராளவாதம் ஆகியன சமூகத்தில் பொய்யான நம்பிக்கைகளைத் தூவிக் கொண்டே செல்கின்றன. இங்கே பொய்யான நம்பிக்கைகளுக்கும் உண்மையான நடைமுறைக்கும் இடையிலான இடைவெளி நாள் தோறும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இதுவே யதார்த்தம் ஆகும். இந்த யதார்த்தத்தை வெகுசன ஊடகங்கள் — குறிப்பாக தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் — பொய்யான அளவில் குறுக்க, முனைகின்றன. புதிய கற்பனை உலகில் சஞ்சரிக்கத் துணைசெய்கின்றன. புதிய மாயைகளைத் திறந்துவிடுகின்றது. தொலைக்காட்சிக்கு முந்தைய வெகுசன ஊடகங்களான பத்திரிகை, வானொலி போன்றவை சில குறிப்பிட்ட தளங்களிலே மட்டும் இயங்கக் கூடியன ஆகும். திரைப்படம் அரங்கிற்குச் சென்று பார்க்க வேண்டியதாக இருந்தது. ஆனால் சின்னத்திரை எனச் செல்லமாக அழைக்கப்படும் தொலைக்காட்சி எல்லாத் தளங்களிலும் இயங்கக் கூடியதாக உள்ளது. இது படித்தவர் பாமரர், உயர்ந்த பிரிவினர் தாழ்ந்த பிரிவினர், ஆண் பெண், நகரத்தினர் கிராமத்தினர், முத்தோர் இளையோர் என எல்லாப் பிரிவினர்க்கும் உகந்ததாக தகவமைக்கப்பட்டுள்ளது. இது வீட்டிற்கு உள்ளேயே வைக்கப்பட்டுள்ள ஒரு திரையரங்கு ஆகும். நாம் விரும்பும் பொழுது விரும்புகிற சேனலையோ விரும்புகிற நிகழ்ச்சிகளையோ நாம் விரும்பும் வரை கண்டு கேட்டு மகிழலாம்.

இது புது மாயைகளை அகலத் திறந்து விடுவதன் மூலம் பொய்யான நம்பிக்கைகட்கும் உண்மையான நடைமுறைக்கும் இடையிலான இடைவெளியைக் குறுக்க முயல்கிறது. இங்கே அடுப்படியில் பூனை தூங்கும் வீடுகளும் உண்டு; அரைகுறை வயிற்றோடு வாழும் மனிதர்களும் உண்டு; அறுசுவை உண்டியை உண்பவர்களும் உண்டு. ஆனால் தொலைக்காட்சி நிகழ்வுகளில் எப்பொழுதும் ஏராளமான உணவு வகைகளைக் கொண்ட விருந்துகள், கேளிக்கைகள் காட்டப்படுகின்றன. பழைய உணவுக்கே அல்லல்படும் மக்களிடையே புதிய புதிய சமையல் குறிப்புகளையும் உணவுப் பொருள்களையும் அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சிகள் காட்டப்படுவதுண்டு. இங்கே குடிசைகளில் குழந்தைகள் பசிதாங்காமல் அழும்பொழுது தொலைக்காட்சியில் சதைப்பிடிப்பான நட்சத்திரங்களின் அங்க அசைவுகளின் மூலம் காமக் களியாட்டங்கள் கூத்தடிக்கப்படுகின்றன. குடிக்கவும்

www.padippakam.com



குண்டி கழுவவும் தண்ணீருக்கு லாட்டரி அடித்துக் கொண்டிருக்கும் மக்கள் வீடுகளில் மினரல் வாட்டர் கம்பெனி விளம்பரங்களும் பெப்சி கோலா, கொக்கோ கோலா விளம்பரங்களும் துல்லியமாக அவற்றின் நீர்த்திவலைகள் ஒட்டிய பாட்டில்களோடு காட்டப்படுகின்றன. நீடித்த வறுமை பரவலான சீரழிவு ஆகியன மத்தியில் செல்வச் செழிப்பான வாழ்க்கைப் பற்றிய பொய்யான நம்பிக்கை ஊட்டப்படுகின்றது.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் மூலம் தனி நபர் இயல் ஒரு சித்தாந்தமாக மக்கள் மனதில் ஆழ ஊன்றப்படுகின்றது. விளம்பரங்களாயினும் நிகழ்ச்சிகளாயினும் தனிநபர் சாகசங்களே முன்னிறுத்தப்படுகின்றன. இவற்றில் காட்டப்படும் செயல் வீரர்கள் நிகழ்ச்சிகளைக் கண்டு கேட்டு களிக்கும் மக்களோடு நேரடியான பிணைப்பை ஏற்படுத்திக் கொள்கின்றார்போல காட்சிப் படிமங்கள் உள்ளன. 'நானும் ஒரு நாள் கபில்தேவ் ஆவேன்' என்று சொல்லும் பொழுதோ ஐ ஆம் ஏ காம்பிளான் கேர்ள் என்று சொல்லும் பொழுதோ அவர்களோடு நேரடியான பிணைப்பு ஏற்படுகிறது. இது நிழலான பிணைப்பு ஆகும் ஒரு செயலின் வெற்றி தோல்வியில் தனிநபரின் முயற்சிக்கு உரிய பங்கை நாம் மறுக்க இயலாத பொழுதிலும், எந்த வொன்றின் வெற்றி தோல்விக்கும் தனிநபரின் முயற்சி/முயற்சியின்மை மட்டுமே காரணம் என்ற தனிநபர் இயல் ஒரு சித்தாந்தமாகக் காட்சிப் படிமத்தின் ஊடாக விளக்கப்படுகிறது. இது ஏழைகளின் இல்லாமைக்கும் பணக்காரனின் செழிப்புக்கும் அவரவரே காரணங்கள் ஆவர் என்ற கருத்தின் நீட்டிப்பாகவே உள்ளது. இது கூட்டு மனோபாவம், கூட்டுச் செயல்பாடு ஆகியனவற்றை நிராகரிப்பதோடு தனிநபர் பொறுக்கித் தனத்துக்கு அடிப்படையாகவும் விளங்குகிறது. எவ்வித அமைப்பு ரீதியான செயல்பாடுகளுக்கும் தம்மை உட்படுத்திக் கொள்ளாத, கொள்ள விரும்பாத பொறுக்கிப் பண்பாடு முன்னிலைப்படுத்திக் காட்சியளிக்கிறது. இது குறிப்பாக ஏழைகள், இளைஞர்கள் ஆகியோரின் திருப்தியை தனிநபர் எதிர்ப்பாகவும் பின்னர் பொறுக்கிப் பண்பாடாகவும் மாற்றும் முயற்சியாகவே உள்ளது. இதனால் தனிநபர் எதிர்ப்பு கூட்டு எதிர்ப்பாகவும் அரசியல் கிளர்ச்சியாகவும் மாறவல்ல அபாயத்தைக் கிள்ளி எறிய முனைகின்றது. கூட்டு நடவடிக்கைகள் மீது அவநம்பிக்கையை ஏற்படுத்துகிறது. இது மக்கள் தம் சொந்த வாழ்வின் சுக துக்கங்கள் மீது மட்டுமே அக்கறை கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளிவிடுகிறது. இதன் மூலம் பிறர் விஷயங்களிலோ பொது வாழ்க்கையிலோ ஈடுபடுவதை மன அளவிலேயே தடை செய்து விடுகிறது.

படிப்பகம்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் உருவாக்கும் கலாச்சாரம் சர்வதேசக் கலாச்சாரம் என்ற பெயரில் ஏகாதிபத்தியக் கலாச்சார மதிப்புகளைத் திணிக்கிறது. வாணிப மனப்பான்மை, கொச்சையான பாலியல் தன்மை, செல்லரித்துப்போன பழைமை வாதம் ஆகியவற்றை இது உயர்த்திப்பிடிக்கிறது, இது நிலைத்த மதிப்புகளை விடுத்து அவ்வப்போது தேவைப்படும் தன்னலத்துக்கான மதிப்புகளை உயர்த்திப் பிடிக்கிறது. உடனடி காபி (Instant Coffee), திடீர் சாம்பார்ப் பொடி என்பனபோல அவ்வப் பொழுது தேவைப்படும் மதிப்புகளை (instant Values) உயர்த்திப் பிடிக்கிறது.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், விளம்பரங்கள் ஆகியன பார்வையாளர்களோடு **சககாலத் தொடர்பு** கொள்வதன் மூலம் அவற்றோடு பார்வையாளர்கள் ஒருவித பொய்யான பிணைப்பு கொள்ளத் துணை செய்கின்றன. இங்கு மிகவும் விழிப்பாகச் செயல்படும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மக்களை வெறும் **பார்வையாளர்களாக** மட்டுமே வைத்திருக்கின்றன. அதுகூட, செயலிழந்த தன்மையுடையவர்களாகவும் உணர்ச்சியற்றவர்களாகவும் மக்களை மாற்றத் துணை செய்கின்றன. அண்மையில் ஈராக் நாட்டுக்கும் அமெரிக்கா தலைமையிலான நாடுகளுக்கும் இடையிலான யுத்தத்தை அந்த காலத்திலேயே நேரடி ஒளிக் காட்சி மூலம் உலகம் கண்டது. அமெரிக்கா அனுப்பிய ஓர் ஏவுகணை புறப்பட்டு, ஈராக்கில் ஓர் எண்ணெய்க் கிணற்றை எரிப்பதையோ பல மாடிக் கட்டிடங்களைத் தகர்ப்பதையோ எல்லோரும் காணும் நேரடி ஒளிக்காட்சி வசதி செய்யப்பட்டிருந்தது. ஏதோ ஒரு யுத்தப்படம் பார்ப்பதைப் போலவும் வீடியோ விளையாட்டு விளையாடுவதைப் போலவும் ஆன உணர்வே பரப்பப்பட்டது. ஓர் ஆக்கிரமிப்பு போரைக் காணும் பொழுது அதன் அழிவு கண்டு ஆக்கிரமிப்பாளர் மீது எவ்விதம் பொறுப்பும் சினமும் ஏற்பட்டு விடாமல் கவனமாக இது தொகுக்கப்பட்டது. அதோடு மட்டுமல்லாமல் ஏகாதிபத்திய சக்திகளை எதிர்க்கும் எந்த ஒரு நாட்டுக்கும் இந்தக் கதியே ஏற்படும் என்ற பீதி உணர்வு உள்ளார்ந்தவிதத்தில் விதைக்கப்பட்டது. மனிதப் படுகொலைகளைச் சாதாரணமாகக் காட்டுவதன் மூலம், மனிதர்களைத் துன்புறுத்துவது தவறானது என்ற பாரம்பரிய மதிப்பு மாற்றிக் காண்பிக்கப்பட்டு விடுகிறது. இது மட்டுமல்ல. அரச பயங்கரவாதம், அரசு வன்முறை ஆகியன அனைத்தும் நியாயப்படுத்துவதற்கும் அவற்றை மன அளவில் மக்கள் ஏற்றுக்கொண்டு உள்ளார்ந்த பீதியுடன் செயல்படுவதற்கும் இது பயன்படுகிறது.

www.padippakam.com



இடது சாரிகளை முறியடிக்கும் விதத்தில் தொலைக்காட்சி பல தந்திரங்களை முன் வைத்துச் செயல்படுகின்றது. இடது சாரிகளின் அரசியல் கருத்துகளையும் மொழிகளையும் தனதாக்கிக் கொண்டு, அவற்றின் அசல் உள்ளடக்கத்தை வெறுமையாக்கி அவற்றில் பிற்போக்குக் கருத்துகளையும் மொழிகளையும் நிரப்ப முயல்கிறது. அரசியல் சொற்களின் பொருள்களை நேரெதிராக மாற்றி சித்தாந்தக் குழப்பத்தை ஏற்படுத்தி அரசியல் அளவில் திசை திருப்பும் முயற்சியாகவே இது உள்ளது.

புரட்சி என்ற சொல்லின் கனபரிமாணங்கள் வெகுவாக நீர்த்துப் போகும்படி இந்தச் சொல் பயன்படுத்தப்படுகிறது. சோப் விளம்பரத்தில் துணி விளம்பரத்தில் சிகரெட் விளம்பரத்தில் புரட்சி என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. பிற்போக்கு செயல் முறைகளையும் பிற்போக்காளர்களையும் முற்போக்குச் சொற்களைக் கொண்டு குறிப்பிடும் முறை தொலைக்காட்சியில் கையாளப்படுகிறது. முன்னாள் சோசலிச நாடுகளில் முதலாளியத்தை மீட்டமைப்பதை நோக்கமாகக் கொண்ட அரசியல் வாதிகளையும் ஏற்றத் தாழ்வுகளை ஊக்குவிப்பவர்களையும் **முதலாளிய மீட்சியாளர்கள்** எனக்குறிப்பிடாமல் **சீர்திருத்தவாதிகள்** என்றோ **புரட்சியாளர்கள்** என்றோ குறிப்பிட்டது. அதேநேரத்தில் முதலாளிய மீட்சியை எதிர்த்து உறுதியாகப் போராடிய சக்திகளை **பழைமைவாதிகள்** என்றும் **மரபுவாதிகள்** என்றும் **செவ்வியயாளர்கள்** என்றும் குறிப்பிட்டது. இது அரசியல் சொற்களின் பொருள்களை நேரெதிராக மாற்றியமைத்து சித்தாந்தக் குழப்பத்தை ஏற்படுத்துகிறது. அதுமட்டுமல்ல. முதலாளிய மீட்சி, முதலாளியத்தை தக்க வைத்தல் ஆகியவை புரட்சிகர செயல்பாடுகள் என எதிர்மறையாக முத்திரை குத்தப்பட்டு தகவல் தொடர்பு சாதனங்கள்மூலம் பரப்பப்பட்டு உலகளாவிய மூளைச் சலவை செய்யப்படுகிறது. இது திட்டமிட்டு செய்யப்படும் சூழ்ச்சியாகும்.

தொழிலாளர்களை வெறும் ஒப்பந்தக் கூலிகளாகவும் முதலாளிகள் நினைத்த நேரத்தில் சேர்க்கவும் நீக்கவும் ஆன ஒரு வாடகைப் பொருளாகவும் மாற்றப்பட்டு தொழிலாளர்க்கு எவ்விதப் பாதுகாப்பு இல்லாத சூழல் இன்று நிலவுகிறது. இதை **உழைப்பின் நெகிழ்ச்சித் தன்மை** (Labour Flexibility) என்ற சொல் முத்திரை குத்தி மறைக்கிறது. மூன்றாம் உலக நாடுகளின் பொதுத்துறை நிறுவனங்கள் இராட்சசப் பன்னாட்டு நிறுவனங்கட்கு விற்கப்படுதலை **ஏகபோகத்தை உடைத்தல்** என்ற

வார்த்தைக் குறியீட்டைக் கொண்டு நிரப்புகிறது. மூன்றாம் உலக நாடுகளின் அரசாங்கங்கள் அரைகுறையாகச் செயல் படுத்தும் சமூக நலத்திட்டங்கள் ஒழிக்கப்பட்டு மக்கள் நல அரசு (Welfare State) என்ற கண்ணோட்டம் இப்போது மறைந்து வருகிறது. இங்கு 19ஆம் நூற்றாண்டுகளுக்கு முந்தைய பொறுப் பற்ற அரசு என்ற கண்ணோட்டத்தை நடைமுறைப்படுத்துதலை **மறுமாற்றம் செய்தல் (Restructure)** என்று வருணிக்கப்படுகிறது. மூன்றாம் உலக நாடுகளை ஏகாதிபத்தியத்தின் வேட்டைக் காடாகத் தொடர்ந்து மாற்றுவதையும், ஏகாதிபத்தியத்தின் உழைப்புச் சுரண்டலுக்கும் கனிவள அபகரிப்புக்கும் உகந்ததாக அந்த நாடுகளை மாற்றுவதையும் **மறுசீரமைப்பு** என்ற சொல்லால் குறிப்பிடப்படுகிறது. சொந்த நாட்டின் பொருளாதாரத்தை ஓரளவு கட்டுப்படுத்தக்கூடிய மூன்றாம் உலக நாடுகளின் அரசு களிடமிருந்து அத்தகைய கட்டுப்பாட்டை, பிரித்து அவற்றின் மீதான ஏகாதிபத்திய ஆதிக்கத்தை கொண்டு வருதலை **கட்டுப் பாட்டை அகற்றல் (Liberalisation)** என்று குறிப்பிடப்படுகிறது

இதற்கு முன் விடுதலை, புரட்சி,ஏகபோகத்தை உடைத்தல் சீர்திருத்தம், சீரமைப்பு ஆகிய சொற்கள் செல்வம், வருவாய், அதிகாரம் ஆகியனவற்றை மக்களுக்கு வழங்கும் நோக்கத்தைக் குறிப்பிடும் இடதுசாரி சொற்களாக இருந்தன. ஆனால் ஏகாதி பத்தியத்தின கைகளில் வருவாய், அதிகாரம், செல்வம் ஆகியன குவிவதை இதே சொற்களைக் கொண்டு தொலைக்காட்சி குறிப் பிடுகிறது. இதன்மூலம் விடுதலைக்கான அரசியல் மொழியை மறு அடிமைக்கான பிற்போக்குக் குறியீடுகளாக மாற்றும்முயற்சி தொடர்ந்து நடைபெறுகிறது.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் காட்டும் நவீனத்துவம் **வர்க்கமற்றதாகவும்** எல்லோருக்கும் பொருந்தக் கூடியதாகவும் சித்திரிக்கப்படுகிறது. **வர்க்கமற்ற நவீனத்துவம்** என்பது மாயை. சமூக ஏற்றத்தாழ்வுகள் பெருகி கொண்டு வரும் சூழலில், உள் நாட்டுத் தொழில்களை ஏகாதிபத்திய பகாசுர நிறுவனங்கள் விழுங்கிக் கொண்டு வரும் சூழலில் ஏகாதிபத்திய நலன்களுக்கு இசைந்த விதத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் மதிப்புகள் நடத்தைகள், பண்புகள், அடையாளங்கள் ஆகியவை புனரமைக் கப்படுகின்றன. அந்த விதத்தில் வர்க்கமற்ற நவீனத்துவம் கட்டமைக்கப்பட்டுக் கொண்டு வருகிறது.

கடந்த பத்தாண்டுகட்கும் மேலாகவே உலகில் சில பொது வான நிகழ்வுகளைக் காணலாம். மூன்றாம் உலக நாடுகளில்

www.padippakam.com



பொருளாதாரச் சீர்குலைவு ஏற்பட்டு பொது வாழ்க்கை நிலை குலைந்து போயிற்று. இந்த நிலைகட்கு எதிராக பொது மக்களின் கிளர்ச்சிகள் குறுகிய காலம் மட்டுமே இருக்கக்கூடிய தாகவும் ஒன்றோடு இன்னொன்று தொடர்பில்லாதவையாகவும் உள்ளது. முற்போக்கு இயக்கங்கள் சித்தாந்த சீரமைப்பிலோ நடைமுறை அனுபவத் தொகுப்பிலோ ஈடுபட்டு சக முற்போக்கு இயக்கங்களுக்கு இடையிலான முரண்பாடுகளை முன்னிலைப் படுத்திச் செயல்படுகின்றன. அதாவது முற்போக்கு இயக்கங்கள் பெற்றிருக்க வேண்டிய வலிமைக்கும் உண்மையில் நிலவும் பலவீனத்துக்கும் இடையில் பெரிய இடைவெளி ஏற்பட்டு விட்டது. முதிர்ந்து வருகின்ற புறவய நிலைக்கு இணையாக அரசையோ சமூகத்தையோ மாற்றி அமைப்பதற்கான அகவய சக்திகள் வளரவில்லை. ஏகாதிபத்திய சக்திகள் முதிர்ந்துவருகிற புறவய நிலைக்கும் வளராத அகவய சக்திகளுக்கும் இடையிலான இடைவெளியை மேலும் விரிவுபடுத்த முயல்கின்றன. ஏகாதி பத்தியம் தம் அரசியல் செயல்பாட்டிற்கு கலாச்சார வடிவங் களின் முக்கியத்துவத்தை மிக நன்கு உணர்ந்திருப்பதால் இன்றைய நவீன அறிவியல் நுட்பம் மிகுந்த தொலைக்காட்சி ஊடகத்தை அத்தகைய கலாச்சார வடிவமாகப் பயன்படுத்து கிறது. இத்தகைய கலாச்சார வடிவம் ஏற்படுத்தும் உளவியல் தாக்கம் மிகவும் முக்கியமானது ஆகும். சுரண்டப்படும் தனி நபர்கள் சீரழிந்து கொண்டிருக்கும் தம் வாழ்க்கை நிலையை மாற்றி அமைக்க ஒன்று சேர்ந்து கூட்டாகச் செயல்படுவதைத் தடுப்பதில் இத்தகைய கலாச்சார வடிவத்தின் பங்களிப்பு முதன்மையானது ஆகும். தொலைக்காட்சி மூலம் பரப்பப்படும் குறியீடுகள், மாயத் தோற்றங்கள், சித்தாந்தங்கள் ஆகியவை வர்க்க அடையாளங்களை நீர்த்துப் போகச் செய்து வர்க்க உணர்வுள்ள செயல்பாடுகளுக்குத் தடைகளாக விளங்குகின்றன. இது மூன்றாம் உலக நாடுகளின் படிப்பாளிகளையும் அரசியல் வாதிகளையும் அதிகாரிகளையும் தம் பக்கம் முற்றாக இணைத்து கொண்டதோடு இல்லாமல் ஒடுக்கப்பட்ட மக்களின் உள் மன உணர்வுகளை முற்றாகக் கைப்பற்றவும் முயன்று கொண்டிருக் கிறது

எனவே மக்கள்திரள் பங்கெடுக்கும் புரட்சிகர அரசியலை உருவாக்குதல் என்பது, ஏகாதிபத்திய சுரண்டலுக்கான சூழ் நிலைக்கு எதிராகவும் அதன் இராணுவ வலிமைக்கு எதிராகவும் மட்டுமின்றி இவற்றுக்குப் பலியாகிக் கொண்டிருக்கும் மக்களைச் செயல் இழக்க வைக்கும் ஏகாதிபத்திய கலாச்சாரத்திற்கு

படிப்பகம்

www.padippakam.com



எதிராகப் போர் தொடுத்தல் என்பதாகும். பொருளியல் மதிப்புகளையும் ஆன்மீக மதிப்புகளையும் சார்ந்து நிறுவப்படும் ஒரு புதிய சமுதாயத்தின் மீதான நம்பிக்கையையும் தீர்க்க தரிசனத்தையும் மீண்டும் உருவாக்க வேண்டிய தேவை உள்ளது. உழைப்பு சார்ந்த மதிப்புகளை மட்டுமின்றி அழகுணர்ச்சி சார்ந்த மதிப்புகளையும் உருவாக்க வேண்டும்

ஏகாதிபத்தியம் ஒரு காகிதப் புலி என்பது மாவோவின் யுத்த தந்திர முடிவு ஆகும். ஆனால் ஏகாதிபத்தியத்தின் செயல் தந்திரங்களுக்கு நாம் அரசியல், பொருளாதார, இராணுவ, கலாச்சார அளவுகளில் மாற்றுச் செயல் தந்திரங்களை முன் வைக்க வேண்டிய தேவையுள்ளது. ஏகாதிபத்தியத்தின் நலன்கட்குப் பயன்படும் தொலைக்காட்சி அழகுததும்பிய சூர்ப்பணகையாகவும் பொன்நிறமான மாரீச மானாகவும் உள்ளது. பரந்துபட்ட மக்கள் இன்றைக்கு இவற்றின் பின் உள்ள கொடூரங்களை நினைக்கவில்லை. இடதுசாரி இயக்கங்களின் செயல் தந்திரங்கள் இவற்றை நினைவுப்படுத்துவதாக மட்டுமின்றி இவற்றைச் சீர்குலைப்பதாகவும் மாற்று வடிவங்களை முன் வைப்பதாகவும் இருத்தல் வேண்டும்.

---

# சாலையோர கனவுகள்

**சிறுகதை**

*மு. மதிவாணன்*

இரவு நேரங்களில் மட்டும்தான் சாலை அழகாயிருக்கிறது. சுத்தமாய், சாலையில் நடுவில் உள்ள சோடியம் விளக்கு தோரணம் கட்டியது போல் எவ்வளவு அழகாய். பனி நாட்களில் பனியுடன் கலந்து வெளிச்சம் பனிப் பிரதேசத்தில் உள்ளது போன்ற உணர்வை ஏற்படுத்தும். இந்த அழகையெல்லாம் இருந்தும் எனக்கென்ன என்பது போல் மீனாட்சி சோடியம் விளக்கையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

லாரி ஒன்று வேகமாகப் போனதில் மொத்தமாய் விழுந்த தூசியைக் கைகளால் தட்டி விட்டாள். பக்கத்தில் அயர்ந்து

படிப்பகம்

www.padippakam.com



தூங்கும் கணவனைப் பார்த்தாள். எத்தனை முறை கழுவினாலும் போகாத சிமெண்டு கால்களில், ஒட்டியிருந்த விரல்களில் சின்னச் சின்ன காயங்களைப் பார்த்தாள். பொங்கிவரும் அழுகையை அடக்கிக் கொண்டு கணவனின் கால்களைத் தூக்கி மடி மீது வைத்துக் கொண்டாள்.

அங்கு படுத்துக் கிடக்கும் அனைவரையும் பார்த்தாள். இருநூறு நபராவது இருக்கும். சிலது குடும்பங்கள், சிலர் தனிக் கட்டை. சிலர் துணிச்சலாய் சாலையின் நடுவில் விளக்குக் கம்பத்தின் கீழ் படுத்துக் கிடக்கிறார்கள். தூக்கத்தில் புரண்டு விழுந்தால் ஏதாவது வாகனம் நசுக்கிவிட்டுப் போய்விடும். இதைப் பற்றியெல்லாம் அவர்கள் கவலைப்படுவதில்லை. படுத்தால் அடுத்து என்ன நடக்கிறது என்று தெரியாமல் மரம் போல் தூங்கிப் போவார்கள்.

சாலையில் சைக்கிளில் செல்லும் ஒருவன் மீனாட்சியையே முறைத்துப் பார்த்துக் கொண்டு சென்றான். கொஞ்ச தூரம் சென்றதும் சைக்கிளை நிறுத்திவிட்டு சிறுநீர் கழிப்பது போல் பாசாங்கு செய்து மீனாட்சியையே முறைத்துப் பார்த்தான். மீனாட்சி கண்களை மூடிக் கொண்டாள். இந்த நகர வாழ்க்கை அவளுக்கு அதிகமான மன உளைச்சலையும், விரக்தியையும் தந்தது பழைய நாட்களை, நினைவுகள் அவள் கண்முன் வந்து நின்றது.

எல்லோருக்கும் ஏற்படுவது போலவே மீனாட்சிக்கும் காதல் ஏற்பட்டது. சோலைபுரம் கிராமத்தில் இரண்டு (குடும்பத்திற்கும்) வீட்டிற்கும் ஏற்பட்ட தீராத பகை இவர்களின் காதலுக்கு குறுக்கே நின்றது. ஓடிவரும் வெள்ளத்தை திடீரென்று தடுத்தால் எப்படியிருக்குமோ அதுபோல் இவர்களைத் தடுக்க முடியவில்லை. அவன் ஓடிவிடலாமா என்றான். அவளும் தலையசைத்தாள்.

காதல் என்பது அசாத்திய துணிச்சலைத் தருகிறது. இந்தத் துணிச்சல் ஓடிப் போவதிலிருந்து தங்களை அங்கீகரிக்காத பெற்றவர்களையும் புறக்கணிக்கத் தோன்றுகிறது.

இப்படியொரு அசாத்தியத் துணிச்சலோடு வந்துவிட்ட மீனாட்சி, ரங்கனுக்கு கட்டிட வேலைதான் அடைக்கலம் கொடுத்தது.

www.padippakam.com



முதல் நாள் கூலியில் இரண்டு பாத்திரங்களை வாங்கி, சாலை ஓரத்தில் கல்லை வைத்து சமைத்துக் கொண்டார்கள்.

ஒருநாள் ரங்கன் சொன்னான், ''எப்படியாவது ஒரு மாதம் பொறுத்துக்கொள். கூலியை சேர்த்து வைத்து குடிசைப் பகுதியில் வீடு பார்த்து போய்விடலாம்'' என்பான். மீனாட்சியும் மகிழ்ச்சியில் தலையசைப்பாள். ஆனால் மழை காரணமாகவும், வேறு சில காரணங்களினாலும் இவர்களுக்கு வயிற்றைக் கழுவுவதற்குப் போதுமான நாட்கள்தான் வேலை கிடைத்தது. இவர்களுடைய வாடகை வீடு கனவு அவள் கண்ணெதிரில் தெரியும் சாலையைப் போலவே சுத்தமாய் இருந்தது.

இருவரும் கடினமாக வேலை செய்துவிட்டு வந்தாலும் ரங்கன் உடனே தூங்கிப் போவான். கணவனின் கோலத்தைப் பார்த்து மீனாட்சி நடுநிசி வரை விழித்துக் கிடப்பாள்.

சாலை விளக்கு அணையும் வரை இப்படித்தான் தன் பழைய வாழ்க்கையை நினைத்துக் கொண்டும், கணவனைப் பார்த்துக் கொண்டும் உட்கார்ந்திருப்பாள். ஆனால் இப்போதெல்லாம் சாலை விளக்கு இரவு முழுவதும் எரிந்து கொண்டுதான் இருக்கிறது.

சில நேரங்களில் ஊருக்கே போய்விடலாமா என நினைப்பாள். உடனே தன்னை மாற்றிக் கொள்வாள். என்னுடைய காதல் வாழ்க்கை கிழிந்த துணியாய் ஆகாமல் அலங்காரமாய் புதுசாய் இருக்க வேண்டும் என நினைப்பாள்.

இன்றும் இப்படித்தான் தான் செல்லரித்துப் போன வாழ்க்கையை நினைத்துக் கொண்டு இருந்தவளுக்கு சாலையில் வேகமாக வந்த ஸ்கூட்டர் ஒன்று மீனாட்சி அருகில் நின்றது. நடுத்தர வயது இளைஞன் மீனாட்சியைப் பார்த்து 'வருகிறாயா, என்றான். அப்படியே நசிந்து போனாள். தூ! என காறித் துப்பினாள்.

மீண்டும் சோடியம் விளக்கை முறைத்துப் பார்த்தாள். கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு எழுந்தாள். கீழே கிடந்த கல்லை எடுத்து சோடியம் விளக்கின்மீது எறிந்தாள் அவளுடைய கோபத்தின் வேகத்தைப் போலவே விளக்கு உடைந்து விழுந்தது. அந்த இடம் முழுவதும் இருளானது. ○

படிப்பகம்

www.padippakam.com

# தினமணியின் சனநாயக மேடையில்(!) திசையற்றவர்களின் திறனாய்வுகள் !

உலகப் பாட்டாளி வர்க்கத்தின் ஈடு இணையற்ற மாபெரும் தலைவர்களும், மார்க்சிய பேராசான்களுமாகிய மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், மாவோ மீது இன்று உலகில் மிகப் பெரிய உள்நோக்கம் கொண்ட மிகமிகக் கீழ்த்தரமான, கேவலமான நச்சுப் பிரச்சாரங்களை தங்களின் அண்டத்தை விழுங்கத் துடிக்கும் மக்கள் தொடர்பு சாதனங்களின் மூலம் செய்வது என்பது, ஏகாதிபத்திய கும்பல்களின் நிகழ்ச்சி நிரலில் மிகமிக முக்கியமானதாக இருக்கிறது.

முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு இன்றைக்கு ஏகாதிபத்தியங்களின் சமூக — பொருளாதார நெருக்கடிகள் எல்லை கடந்து விட்டது. அவர்கள் தங்களை காத்துக்கொள்ள மாறி மாறி உருவாக்கிய அத்தனைத் தத்துவங்களும் ஈயப் பாத்திரங்களாய் பல்லிளித்துவிட்டன. இந்நிலையில் மாசற்ற செஞ்சுடராய் ஒளி வீசிக் கொண்டிருக்கும் மார்க்சிய— லெனினிய— மாசேதுங் சிந்தனையே மனித குலத்தின் விடுதலைக்கு ஒரே மார்க்கம் என்பது நாளும் நாளும் உண்மையாகிக்கொண்டு இருக்கின்றது.

உலகப் பாட்டாளிவர்க்கம் அந்த ஒப்பற்ற ஆயுதத்தைக் கையில் எடுத்துப் போராடிக் கொண்டிருக்கிறது. பாட்டாளி வர்க்கம் மட்டுமல்ல தேசிய இனங்களும், நிற ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடுபவர்களும் என்று உலகில் போராடுகின்ற ஒவ்வொருவரும் தங்களின் போராட்டப் பாதைக்கு வழிகாட்டக் கூடிய ஒரே தத்துவம் இதுவே என்று உணர்ந்தொழுகத் துவங்கி விட்டார்கள்.

மா-லெ சிந்தனையைத் அதன் தத்துவார்த்த—அரசியல் பொருளாதார—பண்பாட்டுத் தளங்களில் நேரடியாக எதிர்க் கொள்ள திராணியற்றுப் போன உலக ஏகாதிபத்தியங்கள்,

ம—3

படிப்பகம்

www.padippakam.com



மார்க்சிய ஆசான்களின் தனிப்பட்ட வாழ்க்கை மீது கீழ்த்தர மான அவதூறு பிரச்சாரங்களை அவிழ்த்து விடுகிறது. அதன் மூலம் உழைக்கும் மக்கள் தங்களின் எதிரிக்கு எதிராய் ஏந்தி நிற்கும் அந்த வெல்லற்கரிய ஒளிவீசும் ஆயுதத்தைப் பற்றி அவநம்பிக்கை கொள்ளச் செய்ய முயல்கிறார்கள்.

இந்த ஏகாதிபத்திய சதியின் ஒரு பகுதியாக இந்தியாவிலும் ஆளும் வர்க்கங்களின் மக்கள் தொடர்புச் சாதனங்கள் சூழ் நிலைக்கு ஏற்ப சுருதியை கூட்டியும், குறைத்தும், நேரடியாகவும், மறைமுகமாகவும், நெச்சியமாகவும் தங்களின் நச்சுப் பிரச்சாரங் களை கட்டவிழ்த்து விட்டு கொண்டிருக்கிறார்கள்.

இந்தியாவின் 'தேசிய' ஆங்கில நாளிதழான 'இந்து' விலிருந்து, தமிழகத்தின் 'நடுநிலை' நாளிதழான 'தினமணி' வரை தங்களின் புத்தியைக் காட்டத் துவங்கி விட்டன.

இரண்டு மாதங்களுக்கு முன்பு தினமணி இதழ் ஏற்படுத்தி கொடுத்த சனநாயக மேடையில் (!) ஏறி நிறப்பிரிகை ரவிக்குமா ரால் முன்மொழியப்பட்டு ஜெயமோகனால் துவக்கப்பட்டுள்ளது. ஒரு குடிகாரனின் உளறல் போலவும் ஒரு பைத்தியக்காரனின் புலம்பல் போலவும், நாற்றமெடுக்கும் இந்து மதத்தையும், செத்துப்போன சமஸ்கிருத பிணத்தையும் தூக்கித்திரியும் ஜெயமோகன் அவதூறுகளையும், அப்பட்டமானபொய்களையும் புனை சுருட்டுகளையும் அள்ளி 'ஆய்வு கட்டுரை' என்ற பெயரில் எழுதியிருக்கிறார். இந்த சர்ச்சை தமிழக உழைக்கும் மக்கள் மீது ஆளும் வர்க்கம் ஏவியுள்ள கருத்தியல் ஆயுதம் என்றே கருதலாம். இதற்கு மறுப்பாக வந்த எஸ்.வி. ராஜதுரை அவர்களின் கட்டுரையும் ஜெயமோகனின் அவதூறுகளைச் சரியாக அம்பலப் படுத்தவில்லை. தொடர்ந்து நடந்த தினமணியின் 'சனநாயக' விவாதத்தில் ஜெயமோகன் கருத்திற்கு ஆதரவான வாசகர் கடிதங்களை மட்டுமே மிகவும் அதிகமாக பிரசுரம் செய்தது. அம்பேத்கார்,பெரியார், மார்க்சிய ஆசான்களின் ஆதரவாளர்கள் வாசகர்கள் எழுதிய ஏராளமான கடிதங்களை மறைத்து விட்டு ஓரிரு கடிதங்களை மட்டுமே வெளியிட்டது. திட்டமிட்ட தனது மார்க்சிய எதிர்ப்பு பிரச்சாரத்தை தெளிவாக 'சனநாயகம்' ''விவாதம்'' என்ற பெயரில் அரங்கேற்றியது! (நிறப்பிரிகை ஆசிரியர் குழுவினர் தங்களின் 'சனநாயக பூர்வமான' கூட்டு விவாதத்திற்கு இனி தலைமை தாங்க 'தினமணி'யை அழைக் கலாம்!)

படிப்பகம்

www.padippakam.com



## கோயபல்ஸ்சும் கொள்கை சிகரமும் :

ஜெயமோகன் கட்டுரையின் சாரம்: மார்க்சிய ஆசான்கள், பெரியார், அம்பேத்கார் ஆகியோரின் சொல்வேறு செயல்வேறு அவர்கள் தங்களின் தனிமனித வாழ்க்கையில் ஒழுக்கக் கேடான வர்கள்! காந்தியின் தனிமனித வாழ்க்கையும், சொல்லும் ஒன்றாக இருந்தது. காந்தி 'தனது வாழ்க்கையே தனது செய்தி' என்று சொன்னார் என்கிறார் ஜெயமோகன். அப்படி என்னதான் அவருடைய செய்தியை இந்த உலகத்திற்கு சொன்னார் என்று அன்றியிலிருந்து இன்றுவரை உலகம் அதைப்பற்றி ஆய்வு செய்து கொண்டிருக்கிறது.

உண்மையில் மார்க்சிய ஆசான்களோ, கம்யூனிஸ்டுகளோ என்றக்கு சொன்னார்கள் வாழ்க்கையேதங்களின் செய்தியென்று. ஆனால் இதன்பொருள் அவர்கள் தனிப்பட்ட வாழ்வில் அவர்கள் எப்படி வேண்டுமானாலும் இருப்பார்கள் என்பதல்ல (உண்மை யில் உலகவரலாற்றில் ஒழுக்கத்திற்கு எடுத்துக்காட்டாய்,மாசற்ற மாணிக்கங்களாய் திகழ்ந்தவர்கள் பொதுவுடமையாளர்கள்தான் என்பதை யார் மறுக்க முடியும்) மாறாக அவர்கள் மட்டுமே சொல்லுக்கும், செயலுக்குமிடையே ஒற்றுமையை சாதிப்பது எப்படி என்பதைப்பற்றி ஆழமாக பகுத்தாய்ந்தவர்களும், அதில் நடைமுறையில் வெற்றியைக் கண்டவர்களும் ஆவார்கள்.

வரலாற்றில் இதையெல்லாம் மறைத்துவிட்டு பொது வுடமையாளர்களின் சொல்லுக்கும் செயலுக்குமிடையே வேறு பாடு உண்டு. பண்பாட்டில் இருந்து அனைத்திலும் கம்யூனிஸ்டு களும் எங்களைப் போலதான் என்று நிரூபிக்க ஏகாதிபத்திய வாதிகளும், அவர்களின் உள்நாட்டு ஏஜெண்டுகளும் முயல் கிறார்கள்.

இதற்காக இவர்கள் சமூக ஏகாதிபத்தியமாய் சீரழிந்து கடைசியில் சிதறிப்போன சோவியத் யூனியனின், தோழர் ஸ்டாலினுக்கு பின்னான வரலாற்றில் இருந்து, இன்றைய சீரழிந்த சீனாவின் நடைமுறையில் இருந்து, இந்தியாவின் திருத்தல் வாதக் கம்யூனிஸ்ட் கட்சிகளான சி.பி.ஐ, சி.பி.எம் ஆகியவற்றின் நடைமுறையில் இருந்தும் எடுத்துகாட்டுகள் காட்டுகிறார்கள். அத்தோடு, நிறுத்தாமல் தோழர் ஸ்டாலின் காலத்து வரலாற்றையும், மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின், மாவோ ஆகியவர்களின் சொந்த வரலாற்றையும்,

www.padippakam.com



திருத்தவும் முயல்கிறார்கள். திருத்தவும் செய்யலாம். இத்தகைய சூழலில் அவர்கள் மார்க்சிய ஆசான்கள் மீது வைக்கும் குற்றச் சாட்டுகளை உடைப்பதைவிட அவற்றிற்கு பின்னால் உள்ள அவர்களின் வர்க்க நோக்கங்களை, சித்தாந்தங்களை அம்பலப் படுத்துவதாகவே இருக்க முடியும்.

## சந்தனமும் குப்பையும் :

இங்கே விவாதத்தில் மிகமுக்கிய விசயம் காரல் மார்க்சோடு காந்தி ஒப்பிடப்படுகிறார். இந்திய வரலாற்றில் கருத்தியல் தளத்தில் கம்யூனிஸ்டுகள் எதிர்கொள்ளும் மோசமான நிலைக்கு இதுவே சிறந்த எடுத்துக்காட்டு எனலாம். யாரோடு யாரை ஒப்பிடுகிறார்கள்? யாரிடமிருந்து யாரை பாதுகாக்க வேண்டி யுள்ளது? பாருங்கள்.

இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் இறுதி நாற்பதுகளில் மிக முக்கியப் பாத்திரம் வகித்த ஒரு நபர். இந்தி யாவின் 'தேசப்பிதா' என்று சுதந்திரத்திற்கு பிறகு, ஒரு நாற்பதாண்டு காலம் மிகப் பெரிய அளவில் கேள்விக்குள்ளாக்கப் படாமல், ஏகபோக புகைப்படமாக எங்கும் தொங்கிக் கொண் டிருந்த ஒரு போட்டோ மனிதர். இன்றைக்கு இந்தியாவெங்கு மான தலித் மக்களின் எழுச்சியோடும், உழவர்களின் ஆயுத எழுச்சியோடும், இந்திய இறையாண்மை கேள்விக்குள்ளாக்கப் பட்டுள்ள சூழலோடும் மிகக் கடுமையான விமர்சனத்திற்கு இலக்காகியுள்ளார்.

எந்த ஆர்.எஸ்.எஸ். காந்தியை எதிர்த்ததோ, அவரைச் சுட்டுக் கொன்றதோ, அதுவும் அதன் பரிவாரங்களுமே இன்று காந்தியைத் தூக்கிப்பிடிக்கும் அளவிற்கு, இந்திய ஆளும் வர்க்கத்தின் அனைத்து பிரிவுகளும் தங்களிடையேயான வேற்றுமையை மறந்து தங்களின் பொது எதிரிகளுக்கு எதிராய் காந்தியைக் கேடயமாக வைத்துக் கொண்டு தாக்குதல் தொடுக் கிறார்கள். மார்க்ஸ் மீது நடத்தப்படுகின்ற அவதூறு பிரச் சாரத்தின் ஒரு பகுதியாகத்தான் அம்பேத்கார், பெரியார் மீதும நடத்தப்படுகிறது. அதனால்தான், காரல் மார்க்சோடு காந்தியை ஒப்பிடவும், அவரை விட காந்தி உயர்ந்தவர் எனக் காட்டவும் முயல்கிறார்கள்.

ஆதிக்கச்சாதி வெறியர்கள் அட்டூழியம் செய்த போது, உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஊரைவிட்டு ஓடுங்கள் என்று

www.padippakam.com



தலித் மக்களிடம் கூறிய காந்தி எங்கே? உலகமே எதிர்த்த போதும், பாட்டாளி வர்க்கம் அரசை கைப்பற்றுவதற்காக நடத்திய முதல் வர்க்கப் போராட்டமான, பாரீஸ்கம்யூனை தன் உயிர் மூச்செனு உயர்த்திப் பிடித்து, அப்போராட்டத்தில் எத்தனையோ பலவீனங்கள் இருந்தபோதும், அதன் உயர்ந்த லட்சியங்களுக்காக அதற்கு வழிகாட்டியும், அதிலிருந்து உலகிற்கு பாடம் கற்றும் கொடுத்த மாபெரும் தலைவர் மார்க்ஸ்எங்கே!

சிறைச்சாலைகளையும், போராட்டங்களையும், ஒடுக்கப் பட்ட மக்களை தன் வழிக்குக் கொண்டு வருவதற்காய் பயன் படுத்திய இவர்களின் 'மகாத்மா' எங்கே? நாடு நாடாக துரத்தப் பட்டாலும் கொண்ட கொள்கையில் இருந்து கொஞ்சமும் விலகிக் கொள்ளாத சமரசமற்ற பாட்டாளி வர்க்கப் போராளி காரல் மார்க்ஸ் எங்கே?

வறுமையின் கோரப்பிடியில் அவருடைய குழந்தைகள் பிறக்கும்போது தொட்டிலும் இல்லை. இறக்கும்போது சவப் பெட்டியும் இல்லை என்கிற நிலையில், பட்டகடன்களுக்காக தன்னிடமுள்ள ஒரு சில கோட்டுக்களையும் விற்றுக் கொடுத்து விட்டு, வீட்டுக்குள்ளேயே வெறும் மேனியுடன் (குளிர் பிரதேசத்தில்) வாழ்ந்தாலும் கொள்கையை விற்காத மார்க்ஸ் என்ற சந்தனம் எங்கே?

பிர்லாவின் மாளிகையில் தங்கி, விலை உயர்ந்த ஆட்டுப் பாலையும், வேர்க்கடலையையும் தின்று, முதலாளிகளுக்கு கைக் கூலியாய், ஏகாதிபத்தியங்களுக்கு ஏவல்நாயாய் இருந்து இந்திய விடுதலைப் போராட்டத்தை திசை திருப்பியும், மழுங்கடித்தும், தலித் மக்களின் தனித் தொகுதியை மறுத்தும், கட்சிக்குள்ளே சனநாயகத்தை மறுத்தும், சவுரி சவுரா போன்ற போர்க்குணமிக்க போராட்டங்களைக் கொச்சைப்படுத்தியும், பகத்சிங்கைத் தூக்கி லேற்றியும், பண்ணையர்களும் பணக்காரர்களும் காங்கிரசைப் பார்த்துப் பயப்பட வேண்டாம் என்று சொல்லி, ஆங்கிலேயரின் வன்முறையை வரவேற்று, உழைக்கும் மக்களின் வன்முறையை கண்டு ''மலம் மூக்கில் நாறுகிறது'' என்று சொல்லி எதிர்த்த காந்தி என்ற குப்பை எங்கே?

## காந்தியின் மலமும் காமமும்

தான் கழித்த மலத்தை தானே எடுத்து காந்தி அப்புறப் படுத்தியதில் மிகப் பெரிய உன்னதம் இருப்பதாக ஜெயமோகன்

www.padippakam.com



கூறுகிறார். குழந்தையின் மலத்தை தாய் சுத்தப்படுத்துவதும், பெற்றோர்கள், உறவினர்கள் நோய்வாய்ப்பட்டுக் கிடக்கும் போதும் உறவினர்கள் அப்புறப்படுத்துகிறார்கள். இதில் எல்லாம் புனிதம், உன்னதம் காண்பதில் என்ன பெரிய விசயங்கள் உள்ளது அது அவரவர் கடமையாகின்றது. அவ்வளவுதான். காந்தி தன்னுடைய மலத்தைத் தானே அப்புறப்படுத்தியதில் ஒரு மோசடித் தனமான தத்துவத்தை மக்களுடைய மனங்களில் பதிய வைக்க முயற்சிக்கிறார் என்பதுதான் உண்மை. வருணாசிரம தத்துவத்தை நியாயப்படுத்த முனைகிறார் என்பதே! இது ஒரு புறம் இருக்க தன்னுடைய மலத்தை தானே சுத்தப்படுத்திக் கொண்ட காந்தி தனக்குத் தேவையான உணவு, உடை, தடி, செருப்பு, கண்ணாடி, குடியிருப்பு, ஆட்டுப்பால் போன்றத் தேவைகளை தானே உற்பத்திச் செய்தாரா? இது சமூக பொருள் உற்பத்தி பரிவர்த்தனையின் சுழற்சி, மனிதனின் கூட்டு உழைப்பால்தான் பெறமுடியும். ஒட்டுமொத்த சமூக இயக்கத்தைப் பற்றிய காந்தியின் கண்ணோட்டம் என்ன? தனி மனிதன் அவனே முயற்சித்தால் வருத்திக் கொண்டால் எல்லாம் முடியும் என்ற மோசடியான குருட்டுத்தனமான கொள்கைதானே! இது இந்து மதத்தில் மோசடியான கர்மா கோட்பாட்டின் நவீன விளக்கம் அல்லாமல் வேறு என்ன?

வயோதிக வயதிலும் காம உணர்வுகளை கட்டுப்படுத்தி தன் ஆன்மா பலத்தை சாதிக்க நினைத்த காந்தியார் தனது படுக்கை அறையில் இளம் பெண்களுடன் நிர்வாணமாக சத்திய சோதனை நடத்தி இருக்கிறார். சோதனையில்வெற்றி பெற்றாரா காந்தி என்பது வேறு விஷயம். ஆனால் அகிம்சை பேசிய காந்தி. அந்த இளம் பெண்களின் ஆண்மையை, உளவியலை, உணர்ச்சிகளை எவ்வளவு கேவலமாகச் சாகடித்திருக்கிறார் என்கிறபோது ஒருவன் நமக்கு எதைச் செய்யக் கூடாது என்று கருதுகிறோமோ அதை மற்றவருக்கும் நாம் செய்யக் கூடாது என்கிற சராசரி பகுத்தறிவைக்கூட சிந்திக்காமல் போன காந்தியாரை ஒரு சமானியனாகக்கூட கருத முடியவில்லை. இங்கு ஒரு காட்டுமிராண்டியைத்தான் பார்க்க முடிகின்றது.

இப்படி காந்தியின் கொள்கை, வாழ்க்கை ...எப்படி மனித குலத்திற்கு எதிராக இருந்தது என்று நிறையச் சொல்லிக் கொண்டே செல்லலாம். எல்லாவற்றிலும் நமது மக்களின் சமூக முன்னேற்றத்தை ஒரு நூற்றாண்டிற்கு தேக்கமடைய செய்த துரோகி என்பதே வரலாறு கூறும் செய்தி! இதுதான் காந்தியின் வாழ்க்கைச் செய்தியே தவிர வேறு ஏதுமில்லை!! இதை உயர்த்தி பிடிப்பதன் மூலம் தன்னை மக்களின் விரோதி என ஜெயமோகன் பகிங்கிரப்படுத்திக் கொண்டு உள்ளார்!

www.padippakam.com



## அறிவு நாணயமற்ற ஆணாதிக்கவாதி

அதே கட்டுரையில் மாபெரும் புரட்சி நடத்திய மாவோ இரண்டாம்தர நடிகையிடம் எப்படி மயங்கினார் என்று கேட்கிறார். என்ன சொல்வது இவனின் ஆராய்ச்சியையும், அந்த வரலாற்று செய்தியை வெளியிட்ட தினமணியின் அறிவு நாணயத்தையும் 'சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரும், நீண்ட பயணத்திலும், புதிய சனநாயகப் புரட்சியின் போது மாவோவின் தோளோடு தோள் நின்று உழைத்த சக தோழரும் வரலாற்று புகழ்மிக்க மாபெரும் பண்பாட்டு புரட்சியின் தளபதிகளின் முதன்மையானவரும், நவீனதிரிபுவாதி டெங்-சோ-பிங்கின் எதிர்புரட்சியை எதிர்த்ததால் 15 ஆண்டுகளுக்கு மேல் கொடுஞ்சிறையில் இருந்து. கடைசியில் கம்யூனிச எதிர்புரட்சி கும்பலால் கொலை செய்யபட்டவருமான தோழர் சியாங் சிங்கைதான் இந்த முட்டாள ஜெயமோகன் இரண்டாந்தர நடிகை என்கிறான் ஜெயமோகனின் வக்கிரத்திற்கு, ஆணாதிக்க திமிருக்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு!

இறுதியாக இத்தனைச் சத்தமாய் ஜெயமோகன் வகையறாக்கள் அனைவரும் வானுக்கு கீழே உள்ள அனைத்தையும் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொண்டு கத்தியபொழுதும், மாபெரும் இயந்திரங்களின் சத்தங்களுக்கு இடையே இயந்திரங்களோடு இயந்திரமாய் உழைத்துக் கொண்டு இருக்கும் தொழிலாளியின், அனைத்து உழைக்கும் மக்களின் காதுகளில் இவை சாவுப் படுக்கையில் காச நோயால் இருமிக் கொண்டிருக்கும் கிழவனின் எரிச்சல் ஊட்டும் இருமல் சத்தமாகவே கேட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இவற்றின் மீதான உழைக்கும் மக்களின் கவனமின்மைப் புலப்படுத்துகிறது.

உழைக்கும் மக்கள் மார்க்சிய- லெனினிய- மாசேதுங் சிந்தனைப் பதாகையை தங்களின் எதிரிகள் கரங்களுக்கு எட்டாத உயரத்திற்கு உயர்த்துவார்கள்!

இறுதியில் ஒளிவீசும் வெல்லற்கரிய கம்யூனிச தத்துவமே இந்த உலகினை வெல்லும்!

ஒன்றிரண்டு போதாது. திக்கெட்டும் இருந்து ஆயிரமாய் லட்சமாய், கோடியாய் இலக்கை நோக்கி ஈட்டி எறியுங்கள்!

செத்து விடவில்லை கோடிக்கால் கம்யூனிசபூதம்! மீண்டும் உயிர்த்தெழுந்து விட்டதென முழங்குங்கள்!!

**கிருஷ்ணன் & சோமன்**

www.padippakam.com

## போரிடும் ஈழத்தின் கவிதை

# மாவீரர்கள்...

□□

**இவர்கள்:**

வைராக்கிய விருட்சத்தின்
விழுதுகள்!
ஏகாதிபத்தியத்தை ஏப்பம் விட்ட
அக்கினிக் குஞ்சுகள்!

குறைப் பிரசவங்களுக்கும்
கருச்சிதைவுகளுக்கும் மத்தியில்
பூரணமானவர்கள்!
சூறாவளியாலும், புயற்காற்றினாலும்
அசைக்க முடியாது போன
ஆலமரங்கள்!

இரத்தக் கடலிலே
நீச்சல் அடித்தவர்கள்!
இரையாக்க நினைத்து
தூண்டில் போட்டவர்களை
தூண்டிலோடு இழுத்தவர்கள்!
உயிர் வாழ்வை சுமந்து
சுழியோடியவர்கள்!

எலும்புகளும் மண்டையோடுகளும்
இடறும் போது
இதயத்தை இரும்பாக்கி கொண்டு
துப்பாக்கி துடுப்பால் கரை தேடியவர்கள்
உறுதிக்கும் உவமானமாகும்
உண்மையின் உடன்பிறப்புகள்

எம் விடுதலை தீயை
உலகெங்கும் கொழுந்து விட்டெரியச் செய்யும்
கொள்கையின் தீப்பிளம்புகள்!
உறங்கிக் கிடந்தவர்களைத்
தட்டியெழுப்பிய உதய சூரியன்கள்!

www.padippakam.com



போராளிகளைப் படைத்து கொண்டிருக்கும்
புதிய சிருஷ்டிக் கர்த்தாக்கள்!
எதிரியை நோக்கி எடுத்து வைக்கும்
ஒவ்வோர் அடியையும் துரிதப்படுத்தி
முன்னேற வைக்கும் வீரத்திற்கு
விரிவுரை நிகழ்த்திடும் விரிவுரையாளர்கள்!

தமிழீழத்தில் புலரும் பொழுதுக்கு
ஒளி கொடுக்கப் போகும்
சூரியக் கதிர்கள்!
இவர்கள் இல்லாமல் போனவர்கள் அல்ல
எம்முள் எல்லாமுமாய் இருப்பவர்கள்!

பெண் போராளி வானதி
நன்றி : எரிமலை (பிரான்ஸ்)

## எங்கள் கரம்

பாட்டாளிதாசன்

பாத்திக் கட்டி நாத்து நட்டு
பகல் இரவா பாடுபட்டு
வேர்வை சிந்தி
உழைத்து நாங்க
வேதனையே வாழ்க்கையாக
வெந்து தணிவதென்ன,

மடை திறந்து தண்ணிவிட்டு
மழை பார்த்து உரமிட்டு
காய வைத்து, கதிரறுத்து
களத்து மேட்டில்
பொலி வைத்து
கஞ்சிக்கு வழியின்றி
வறுமையிலே நாங்க
வாழ்வதென்ன,

பருவம் பாத்து
பதம் பாத்து
விதை விதைத்து தண்ணிவிட்டு
உரம் விட்டு விளைவித்து
நாங்க ஊமையாக
உருக்குலைந்து போவதென்ன.

மா வெட்டி
தேக்கு வெட்டி
மாளிகையாய் வீடு கட்டி
மணிக் கணக்காய்
உழைப்பைக் கொட்டி,
ஓலைக் குடிசையிலே
நாங்க குலைவதென்ன,

பிறப்பு முதல்
இறப்பு வரை நாங்கள்
உழைத்துவிட்டு வீழ்வதா?
உரிமையின்றி தினந்தினமும்
அடிமையிலே வாழ்வதா?

இனி...
ஏர் பிடிக்கும் எங்கள் கரம்
எதுவும் பிடிக்க தயங்காது.
கருவிப் போரில்தான்
உரிமையென்றால்
போரிடவும் மயங்காது.

புதிய சாதிமதமற்ற
ஏற்ற தாழ்வற்ற
சமுதாயம் படைக்கும் வரை
எங்கள் இனம் உறங்காது...

(சென்னை நடுவண் சிறையில் கொடிய 'தடா' சட்டத்தின் கீழ் இருந்தும் உணர்வு குன்றா போராளியின் படைப்பு இது.)

# மதிப்பிற்குரிய துரோகிக்கு ஒரு வெளிப்படையான கடிதம்

18-12-95
சென்னை

---

**நேர்மையற்ற கமலே!**

வெரிகுட். (உனக்கு நல்ல தமிழைவிட தமிங்கலம் நன்றாகப் புரியும் என்பதால் இடை இடையே சில தமிங்கல வார்த்தைகள் வரும். உபயம்: குருதிப்புனல் சினிமா) கடைசியாக உன் வர்க்க 'புத்தியை'க் காட்டி விட்டதற்கு மிக்க நன்றி! உனது மாமா மணிரத்னம் எட்டடிப் பாய்ந்து இந்திய ஆளும்வர்க்கத்தைத்தான் திருப்திபடுத்தினார். நீயோ பதினாறு அடி பாய்ந்து அமெரிக்க ஏகாதிபத்தியத்தையே சந்தோசப்படுத்தி விட்டாய்! நாங்கள் இதைச் சொல்லவில்லை. ஆஸ்கார் பரிசுக்கு குருதிப்புனல் ஏன் அனுப்பப்பட்டது என்ற கேள்விக்கு இந்திய திரைப்படத்தின் தேர்வுக் குழு அதிகாரியின் பதிலே எல்லா மக்களுக்கும் வெட்ட வெளிச்சமாகி விட்டது. ''தீவிரவாதத்தை, பயங்கரவாதத்தை எதிர்ப்போம்'' என்கிற ஏகாதிபத்தியங்களின் முழக்கமும், உனது குரலும் ஒன்றாக இணைந்து இழையோடுவதால் பரிசு நிச்சயம் கிடைக்க வாய்ப்பு உள்ளது என்று அந்த அதிகாரி உண்மையை போட்டு உடைத்து விட்டார். ஜீ.வி., மணிரத்னம் போன்ற தரகு முதலாளிய கும்பலில் இருந்து வேறு என்ன எதிர்பார்க்க முடியும்? இதைக் கொஞ்சம் விரிவாகவே உனக்கு விளக்குகிறோம். அப்பொழுதாவது உங்களுடைய... உன்னுடைய புத்தியில் உரைக்கின்றதா என்று பார்ப்போம்!

கடந்த பல ஆண்டுகளாக ஆந்திரா, பீகார் மாநிலங்களில் நக்கல்பாரிகளின் தலைமையில் உழவர் விடுதலை போராட்டங்களும், காஷ்மீர், அசாம், பஞ்சாப், வடகிழக்கு மாநிலங்களில் தேசிய இன விடுதலைப் போராட்டங்களும் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நிலவும் சமூக-பொருளியல் முரண்களால் இவைகள் தோன்றுகின்றன என்பதை வசதியாக

மறைத்துவிட்டு சட்டம்-ஒழுங்கு பிரச்சனையாகவும், பாகிஸ்தான் தூண்டிவிடுவதாகவும் பல ஆண்டுகளாக கட்டுகதைகள் நிறையவே உள்ளன.

இந்தியாவை ஆட்சி புரியும் தரகு பெரும் முதலாளிகளின், ஏகாதிபத்தியங்களின் நலனிற்காக உள்ள இந்திய சந்தையானது மக்கள் போராட்டங்களினால் ஆட்டம் காணத் தொடங்கிவிட்டது. இந்நெருக்கடியை எதிர்கொள்ளவே ''இந்துவத்துவம்'' என்ற கோட்பாட்டினை ஆளும்வர்க்கம் முன் வைக்கிறது. அதன் மூலமே, ஒருங்கிணைக்கப்பட்ட இந்தியச் சந்தையின் வளர்ந்து வரும் வீழ்ச்சியைத் தடுத்துநிறுத்த இயலும் என்றும் எண்ணுகிறது. அதற்காகவே, பண்பாட்டுதளத்தில் இக்கோட்பாட்டினை முழுவீச்சில் நடைமுறைப்படுத்துகிறது!

முதலாவதாக, தன் பிடியில் உள்ள தொலைக்காட்சி மூலம் இராமாயணம், மகாபாரதம், சாணக்கியா முதலிய தொடர்களை நாடெங்கும் ஒளிபரப்பி, ''நாடு நெருக்கடியில் சிக்கியுள்ளது'' அதற்கு பழம்பெருமை(!) மிக்க இந்து மதமே தீர்வு; அதனோடு நம்மை நாம் நெருக்கமாக அடையாளப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காக பரந்துபட்ட மக்களை தன்னுடைய பாசிச கருத்தியலுக்கு ஆதரவாக திரட்டிக்கொள்ள ஆரம்பித்தது. இதனுடைய வளர்ச்சிப் போக்கிலேதான் பாபர் மசூதியை இடிக்க சாத்தியமாயிற்று. நீ கூட இதில் கொஞ்சநாள் முற்போக்கு வேசம் போட்டுக் கொண்டுத் திரிந்தாய் என்பது ஞாபகம் இருக்குமென நினைக்கிறோம்.

இத்தகைய பாசிசக் கருத்தியல் போக்கிற்கு உதவி செய்யும் முகமாகவும், தன்னுடைய வர்க்க நலனிற்காகவும் தமிழ்நாட்டு மாநிலத்தில் உள்ள தரகு பெரு முதலாளிகளின் பிடியில் உள்ள தமிழ் திரைப்பட துறையும் தன் பங்கிற்கு இப்போக்கோடு தன்னை இணைத்துக் கொண்டது. இதனாலேயே 'தேச நலன்', 'தேச நெருக்கடி', தேச ஒற்றுமை, பாகிஸ்தான் சதி, முஸ்லீம் எதிர்ப்பு, 'வெளிநாட்டுச் சக்திகளின் தூண்டுதலால் தீவிரவாதிகளால் பிரதமருக்கு ஆபத்து முதல்வருக்கு ஆபத்து' என்ற உளறல்களின் பின்னணியில் ''ரோஜா, சூரியன், ஐ லவ் இந்தியா, ஜெய்ஹிந்த், பம்பாய், ரகசிய போலிஸ்'' போன்ற திரைப்படங்கள் வந்தன. அந்த வரிசையில் உனது குருதிப்புனலும் இன்று சேர்ந்து கொண்டது.

www.padippakam.com



இத்திரைப் படத்தின் மூலம் சமூக உணர்வுள்ள அறிவு ஜீவியாக — சனநாயகவாதியாக அரிதாரம் போட்ட உனது வேசம் கலைந்து விட்டது. முட்டையை உடைத்து கொண்டு வந்தது கோழி குஞ்சல்ல! கொடிய கருநாக குட்டிதான் என்பது வெட்ட வெளிச்சமாகி விட்டது. ஒவ்வொரு காட்சியிலும், வசனத்திலும் மக்களை நேசிப்பவர்கள் மீது ஆலகால நஞ்சை அள்ளி வீசுகிறாய்! இது உனது சொந்த விருப்பம் மட்டும் அல்ல. சுரண்டல் கும்பல்களின் அதீத நெருக்கடிக்கு தீர்வு சொல்லும் முகமாகவும், புறநிலைத் தேவையில் இருந்தும் வெளிவந்துள்ளது. அதனால் தான் எல்லா முதலாளிய, திரிபுவாத பத்திரிக்கைகளும் இப் படத்தை புகழ்கின்றன! கூலி எழுத்தாளர் சுஜாதா(புதிய பார்வை இதழில்] சர்வதேச தரத்திற்கு தமிழ்நாட்டு படம் உயர்ந்து விட்டது என்று மகிழ்கிறார். ''முஸ்லீம்கள் (அப்பாஸ்) அரசாங்கத்தை ஆதரித்து உயிரை விட்டால் தேச பக்தி. அரசாங்கத்தை எதிர்த்தால் தேச விரோதி. பாகிஸ்தான் கைக்கூலி'' என்று மிகப் பெரும் கண்டுபிடிப்பை கமல் கண்டுபிடித்து விட்டதாக சுஜாதா பாராட்டுகிறார்! தேசபக்தியை முத்தக் காட்சிமூலம் போஸ்டர் அடித்து ஊர் ஊராய் ஒட்டி கமல் பரப்புவதை சொல்ல சுஜாதா மறந்து விட்டு இருக்கிறார்! வாழ்க உங்களின் தேசபக்தி!

'சுபமங்களா' இதழானது தெளிவானத் திரைக்கதை என்கிறது. வாழ்க இதன் முற்போக்கு சனநாயக விமர்சனம்! மையக்கதை இதுதான். எதற்காகப் போராடுகிறார்கள் எனத் தெரியாத ஒரு தீவிரவாதக் கும்பல் அரசாங்கத்தின் முக்கிய பிரதிநிதிகளைக் கொன்றுக் கொண்டிருக்கிறது. தேச பக்தியும், நேர்மையும், ஒழுக்கமும் கொண்ட இரு போலீஸ் அதிகாரிகள் அக்கும்பலில் ஊடுருவி தங்கள் உயிரைத்தியாகம் செய்து தலைமையைக் கைப்பற்றி தேசத்தைக் காப்பாற்றுகின்றனர்.

கதை, வசனம், காட்சி அமைப்புகள் அனைத்தும் தீவிரவாதிகள் ஆந்திரா நக்சல்பாரி இயக்கத்தினரை குறிப்பிடுவதாக உள்ளது சில இடங்களில் விடுதலை புலிகள், காஷ்மீர் போராளிகளைக் குறிப்பதாக வருகின்றது. ஐதராபாத் போலிஸ் அகடாமியில் ஒரு மாதம் சேர்ந்து போலீஸ்காரர்கள் மண்டை முடியை எப்படி வெட்டுகிறார்கள் என்று மயிர்ஆராய்ச்சி செய்துவிட்டு மாபெரும்யாதார்த்தம் என்கிறாய்! இன்னொரு பக்கம்தீவிரவாதிகள் எதற்குப் போராடுகிறார்கள் என்பது தெரியாமல் உள்ளனர் என்கிறாய், தெலுங்கின் மிகச்சிறந்த இலக்கிய படைப்புகளே நக்சல்பாரி புரட்சியாளர்கள் படைக்கும் பாடல்கள், சிறுகதைகள்

www.padippakam.com



நாவல்கள்தான். இவற்றில் ஒரு பக்கத்தையாவது படிக்க முயற்சி செய்தாயா? கௌதமி, விஸ்வநாத் என்று தெலுங்கு கலைஞர்கள். பட்டாளத்தையே உனது படத்தில் போட்ட நீ, அங்குள்ள லைட்பாயிடம் கேட்டு இருந்தால்கூட கதை கதையாய்நக்சல்பாரி தோழர்களின் தியாக வரலாற்றை, உயர்ந்த லட்சியங்களை கூறி யிருப்பானே! இதுதான் உனது சனநாயகமா?

கமல் தமது சமூக பிரச்சனைக்கான, யதார்த்தமான கதையை எழுத்தாளர்கள் பாலகுமாரனிடமும், சுஜாதாவிடம் காட்டி ஆலோசனை கேட்டுவிட்டுதான் படம் எடுப்பார் என்று குருதிப்புனல் இயக்குநர் ஸ்ரீராம் கூறுகிறார். நல்ல ஜோடிதான்! உங்களுக்கும் யதார்த்தத்திற்கும், சமூக பிரச்சினைக்கும் என்ன சம்பந்தம். உங்களுடைய மர மண்டை களில் இந்த நூற்றாண்டில் இதெல்லாம் உதிக்காது! ஒரு பண்பாட்டு புரட்சி என்னும் அடர் ஆசிட்டில் (அமிலத்தில்) உங்களின் மூளைகளைக் கழுவி மீண்டும் தலையில் மாட்டினால்தான் சமூகப் பிரச்சனைப் பற்றி கொஞ்ச மாவது யோசனை செய்வீர்கள். ஜட்டி போடுவது, முத்தம் கொடுப்பது. குரங்கு சேஷ்டை, பெண்கள் குளியல் அறையில் இருந்து துவட்டும் துணியுடன் வருவது, குருதி வழியும் முகம் ஆகியவைகளே காண்பித்தால் எதார்த்தமான கலை படம்! இல்லையென்றால் மசாலா! எவ்வளவு! பெரிய தத்துவம்! இதற் காகத்தான் ஆனந்த விகடன் முதல் சுஜாதா வரை ஒரு கும்பலே பூரித்து போகின்றது!

நிலவும் சுரண்டல் அமைப்பில் ஒட்டுப் பொறுக்கி அரசியல் வாதிகளும், ஆளும் வர்க்க சட்டமும், காவல்துறையும், இராணு வமும் உழைக்கும் மக்களை தங்களின் கோரப் பற்களால் கடித்து குதறிக் கொண்டிருக்கின்றன. தங்களின் சுய சுகதுக்கங்களைத் தியாகம் செய்து மக்கள் கூட்டத்தைத் தங்களின் குடும்பமாகக் கருதி இந்த காட்டுமிராண்டிகளின் அடக்குமுறைக்கு எதிராக மக்களோடு இணைந்து ஆயுதம் தாங்கி நக்சல்பாரிகள் போராடி வருகின்றனர். அவர்களின் எதிரிகள்கூட இதைப் பல முறைகள் தவிர்க்க இயலாமல் ஏற்புரைகள் செய்துள்ளனர். மாமேதை மாசேதுங் சொன்னது போல ஆயுதங்கள் அற்ற ஒரு ஒளிமயமான சமுதாயத்திற்காக இன்று ஆயுதம் தாங்குவது அவசியம் என்ற உயர்ந்த இலட்சியத்திற்காக அவ்வாறு செய்கின்றனர். தங்கள் சொந்த விருப்பங்களுக்காக போராளிகள் ஒரு நாளும் ஆயுதம் தாங்கவில்லை. அவர்களைத்தான் எதற்காக என்று தெரியாம லேயே போராடும் துப்பாக்கி ரௌடிகள் என்கிறாய்!

படிப்பகம்

www.padippakam.com



## புளுகு மூட்டை கமலே!

போலிஸ் அதிகாரிகள் நேர்மையானவர்கள் ஒழுக்க மானவர்கள். மனிதாபிமானம் உள்ளவர்கள். போராளிகள் குழந்தைகளை கொல்வார்கள். கர்ப்பிணி பெண்ணை பணயமாக வைப்பார்கள் அடேயப்பா! இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய புளுகு இதுவாகத்தான் இருக்கும். ஹிட்லரின் வாரிசாக மாற சிறந்த தகுதி உனக்குள்ளது. தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை-பயமுறுத்தக் கூட ''போலிஸ்காரன் கிட்ட புடிச்சு கொடுத்துரு வேன்'' என்று பயமுறுத்துவது உனக்கு தெரியுமா? குழந்தைகள் மலராத அரும்புகளைக்கூட நேசிக்கத் தெரியாதவர்கள் போலிஸ் காரர்கள் என்பதுதானே நமது தாய்மார்களின் தீர்ப்பு!

போராளிகள் சுத்தமற்றவர்கள் என்று அருவறுப்பு ஏற் படும் வண்ணம் கழிப்பிடம் அருகே சாப்பிடுவார்கள் என்கிறாய் ஏற்றுக் கொண்ட இலட்சியத்திற்காக சில சமயங்களில் தூய்மையைக் குறித்து கவலைப்படாமல் போராளிகள் இருக்க வேண்டியது உள்ளது. போராட்டம் என்பது மாலை நேரவிருந் தல்ல. அல்லது குதிரை சவாரி போன்று இனிமையானதல்ல. சாப்பிடுவதற்கு அழகிய அறையை தேட முடியாது. சுகபோக வாழ்க்கையில் ஈடுபடும் போலிஸ் அதிகாரிகளுக்கும், மேட்டுகுடி யினருக்கும்தான் எம். எப் ஹீசேன் வரைந்த ஓவியங்கள், கஜீராஹோ சிற்பங்களின் ஓவியங்கள் நிறைந்த டையினிங் அறை யில் ஜீரணமாகாமல் ருசித்து சாப்பிட நேரமும் வாய்ப்பும் இருக்கிறது. உண்மையில் மலம் அள்ளுபவர்கள், சாக்கடை நீரில் இறங்குபவர்கள் தங்களுடைய தொழிலின் அசுத்தத்தைக் குறித்து நினைக்க ஆரம்பித்தால் உன்னைப் போன்றவர்கள் சுத்தம், தூய்மை எல்லாம் அதோ கதிதான்!

போராளிகள் பெண்களை [சிறுமியை] பாலியல் பலாத் காரம் செய்வார்கள். போலிஸ் அதிகாரிகள் உத்தமர்கள். உனது அழுகிய மூளைக்கு தினம் தினம் தளி (தர்மபுரி), சிதம்பரம், வாச்சாத்தி, சின்னாம்பதி, இராமேஸ்வரம், வண்ணாரப்பேட்டை என்று பெண்கள் போலிஸ் கொட்டடியிலேயே பாலியல் பலாத் காரத்திற்கு ஆவது ஏன் படவில்லை? பஞ்சாப் போலிஸ் அதிகாரி கே.பி.எஸ்.கில் (ரஜினியின் கதாநாயகன்) போன்ற அதிகாரிகள் பெண்களை அவமானப்படுத்துவது உச்சநீதி மன்றம் வரை சிரிப் பாய் சிரிக்கிறதே! உனக்கு கேட்கவில்லையா? கொரில்லா போராட்

www.padippakam.com



டத்திற்கு மக்கள்தான் ஆதாரம்! அந்த நிலையில் அவர்களால் எப்படி பாலியல் பலாத்காரம் பற்றி யோசிக்க முடியும் என்பது ஏன் உனது மரமண்டைக்குத் தெரியவில்லை.?

உனது படத்தில் போலிஸ் அதிகாரியின் மனைவி மார்குஸ் போன்ற இலட்சியம் எண்ணமுடைய ஆங்கில நாவலாசிரியர் களின் நாவலைப் படித்துக் கொண்டிருப்பார்கள் எனவும், போராளியின் மனைவியோ எந்த கவலையும் இல்லாமல் மூன்றாந் தர ரசனை கொண்ட சினிமா பார்ப்பாள் என்கிறாய். தன்னோடு சேர்ந்து தன் மனைவி பிள்ளைகள் குடும்பம் என்று எல்லோருக் கும் சமூக அக்கறையை ஏற்படுத்தி சமூக நலனுக்காக பங்காற்ற செய்யும் போராளிகளின் குணாம்சத்தை, கூலிக்கு மாரடிக்கும் போலிஸ் அதிகாரிகள் குடும்பத்திற்கும், கணவனின் தொழிலை வருமானத்தோடு மட்டுமே புரிந்து கொண்டு கிளப்புகள், சீரழிவு கேளிக்கைகளில் தங்களின் நேரங்களை செலவிடும் மேட்டுக்குடி பெண்களுக்கும் பொருத்தி காட்டியிருக்கும் உனது குரோதபுத்தி அபாரம்!

இன்று ஈழமே எரிந்து கொண்டிருக்கிறது. பாசிச சிங்கள இனவெறி சந்திரிகா அரசு உள்நாட்டு போரை நடத்துகிறது. ஈழத்தமிழர்கள் படும் துயரம் வங்க கடலினும் பெரியதாகி விட்டுள்ளது. இவர்களுக்கு ஆதரவாகத் தமிழக மக்கள் அனை வரும் ஒருங்கிணைந்து குரல் கொடுத்து வருகின்றனர். உனது சக நடிகர், சினிமாவில் வில்லனாக நடித்தாலும், நிஜ வாழ்க்கையில் இச்சமூகப் பிரச்சனையில் அக்கரை உள்ளவராக உள்ள மன்சூர் அலிகான் முதல் கொண்டு அனைவரும் ஈழப் போராளிகளுக்கு, துயரும் தமிழீழ மக்களுக்கு ஆதரவாய் நிற்கின்றனர். நீயோ அவர்களை 'பொறுக்கி' என்று சிறுமைப் படுத்துகிறாய். எவ்வளவு கெடுமதி உனக்கு! வரலாறு உன்னை மன்னிக்கவே செய்யாது!

சிறைகளில் நடக்கும் கொடுமைகளை ''மகாநதியில்'', காட்டியதற்கு இந்தப் படத்தில் பிராயசித்தம் தேடிவிட்டாய். சித்ரவதைகள் செய்வதை, போலி மோதல்களில் கொல்வதை தேச நலனுக்காக நியாயப்படுத்துகிறாய்.

எவ்வளவுதான் ஏகாதிபத்திய சார்பாக இருந்தாலும் கூட, நாத்திகம், பெரியார் என்று பேசினாலும்கூட போராளி மகன் போராளியாவான், போலீஸ் மகன் போலிசாக மாறுவான் என்ற வர்ணாசிரம புத்தி உங்களைவிட்டு மாறவே இல்லை என்பதை அடிகோடிட்டு நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும். இன்னும் நிறைய பண்பாட்டு புரட்சிகளும், பெரியார்களும் தமிழகத்திற்குத் தேவையாக உள்ளதையே இது காட்டுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



**கலை நுணுக்கங்கள் பற்றி சில வரிகள்**

டால்பி ஸ்டீரியோ போன்ற அதிநவீன திரைப்பட நுணுக்கங்களை கொண்டு, சிறந்த காட்சி அமைப்புகள் கொண்ட தெளிவான திரைக்கதை, வசனங்கள் கொண்ட கலைபடம் என்று பல பாராட்டுகள்! இதில்கூட பல்வேறு காட்சிகள் அப்பட்டமான மேல் நாட்டு திரைப்படங்களின் காப்பி என்றும், அர்ஜீன்-விஜய சாந்தி வகையறாக்களின் மர்மக்கதை என்றும், ''உங்கள் தலைவர்கள் செத்து போனதால் தத்துவமும் கலாவதி ஆகி விட்டது.'' போன்ற 19ஆம் நூற்றாண்டு வசனங்கள் கொண்டது என்றும் திரைப்படத்துறையை சேர்ந்த நண்பர்கள், தோழர்கள் பலரும் கூறுகின்றனர். அதை எல்லாம் விவரித்தால் கடிதம் நீளும் என்பதால், வேறு பல அரங்குகளில் வைத்துக் கொள்வோம்!

ஒன்றை மட்டும் கூறவிரும்புகிறோம். விருதுகளின் மயக்கத்தில், பண போதையில் உள்ள உங்களைப் போன்றவர்களிடம் இருந்து நல்ல தமிழ் சினிமாவோ, படைப்பாற்றலுடன் கூடிய கதையே கலைபடமோ வராது! சுஜாதா, பாலகுமாரன், பால சந்தர் போன்றோரின் பின்னணியில் அதையெல்லாம் நீங்கள் கற்பனை பண்ணிக் கூட பார்க்க கூடாது. சமூகத்தின் உண்மையான பிரச்சனைகளும், யதார்த்தமும் ஒளிவீசும் தீச்சுவாலையை உடைய நெருப்பு. துணியும் நேர்மையும் இருந்தால் அதில் குளித்து மூழ்கி எழுந்திருங்கள்! மிஞ்சி இருந்தால் நிச்சயமாக நல்ல சினிமா, சர்வதேச தரம் வாய்ந்த கலைப்படம் தானாக உருவாகும். அது வரையில் மன்மத லீலை, சகலகலா வல்லவன் போன்ற படங்களில் நடித்து கொண்டு இரு! அதுவே இந்த நாட்டிற்கு மக்களுக்கு நீ செய்யும் சிறந்த தொண்டு!

இறுதியாக ஒரு வேண்டுகோளுடன் இம்மடலை முடித்து கொள்கிறோம். சுதந்திரப் போராட்ட வீரர் மருதநாயகம் பற்றி திரைப்படம் எடுக்கப் போவதாய் காதில் விழுகிறது! அதற்கெல்லாம் நாணயம், நேர்மை, சமூக அக்கறை வேண்டும். உனது தரத்திற்கு சூரிய கதிர் ஆப்பிரேசன சந்திரிகா அல்லது அமைதி படை ராஜீவ், ஜாலியன் வாலாபாக் ஜெனரல் டயர் என்று பல படங்கள் உள்ளது. இவற்றை எல்லாம எடுத்தால் ஆஸ்கார் அவார்டு வாசலை வந்து நிச்சயம்கதவை தட்டும்!

மீண்டும் 'மருதநாயகத்தில்' சந்திப்போம்...

இப்படிக்கு...

பாஸ்கர் & ராஜீ & நடராசன்

படிப்பகம்

www.padippakam.com

உங்களது காமசூத்திரங்களிலே
பெண்களின் கைகள் மலர்போல சிவந்தது.
உடல் பூப்போல மென்மையானது
தோல் பட்டுபோல மிருதுவானது
தலைமயிர் வாசம் நிறைந்தது

பதிலடி கொடுக்கிறேன் நான்
பெற்றுக் கொள்ளுங்கள்
நானொரு பெண்
எனது உடல்தோல் வெங்கனலை வீசியடிக்கும்
எனது தலைமயிர் ஆலைப்புகை வீச்சமடிக்கும்
எனது கைகள் வலியெனும் கத்தி கிழித்துக்
காயப்பட்டுச் சிவந்திருக்கும்
ஏ, வெட்கங் கெட்டவர்களே
என் பசி போலியானதென்றா கூறினீர்கள்
எனது அம்மணம் போலி வேடம் என்றா கூறினீர்கள்
கேடு கெட்ட சுரண்டும் வர்க்கங்களே
உங்களது வெட்கம் கெட்ட அகராதியிலே
பெண்களுக்கு என்ன தகுதி கொடுத்திருக்கிறீர்கள்?

நானொரு பெண்
துன்பங்கள் கொத்திக் காயங்கள் நிரம்பிய
இதயம் ஒன்று எனக்குண்டு
எனது கால்களிலே
தீச்சொரியும் விடுதலை அம்புகளின்
சிவந்த பிம்பங்கள்
சீறிப் பிறக்கின்றன
எனது கரங்கள் பயிற்சி பெற்றுவிட்டன
துயரங்கள் கோடி துரத்தினாலும் அஞ்சமாட்டேன்.
ஆண்மையோடு நான் ஏந்துவோம்
துப்பாக்கியை.

(ஈரானில் 1945 இல் பிறந்தவர். அச்சமுகத்தில் அநீதிகளுக்கு எதிராக போரிட்ட பெண் வீரர். ஆசிரியர் தொழில் பணி புரிந்தவர். மாணவர் இயக்கத்தில் மும்முரமாக ஈடுபட்டதால் சிறைக் கொட்டடியில் அரசு இவரை பூட்டி வைத்தது. 'கெரில்லாக்களின் படையணியில், செயல் துடிப்பு மிக்க உறுப்பினர் 1973 மே மாதம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் படைகளால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டார். மக்களின் போராட்டத்துக்குப் பாய்ச்சிய புது ரத்தம் போன்றவை இவரது கவிதைகள்.)

# நானொரு பெண்

## மார்ஜியே அஹ்மதி ஓங்கூய்

ஈரான்

நானொரு தாய்
நானொரு சகோதரி
நானொரு பணிவுள்ள மனைவி
நானொரு பெண்
நினைவு அறிந்த நாள் முதல்
பாலைவனச் சுடுமணலில்
மேலும் கீழுமாய் உதைத்துக் களைக்கிறேன்

நானொரு பெண்
வடபகுதிக் கிராமப்புறத்திலிருந்து வந்தவள்நான்
நெல்விளையும் கழனியிலே
தேயிலைத் தோட்டங்களிலே
கசக்கிப் பிழியப்பட்டு உழைக்கிறேன்
நினைவறிந்த நாள்முதல் உழைக்கிறேன்
காலை முதல் மாலை வரை களத்து மேடுகளில்
உடலெல்லாம் இறுக்கிப் பிழிய
நானும் என்னுடன் எலும்பும் தோலுமாய்
ஒரு மாடும் உழைக்கிறோம்

நானொரு பெண்
நானொரு தொழிலாளி
ஆலையின் பிரும்மாண்டமான யந்திரங்களை
என் கரங்கள் இயக்குகின்றன.
அவற்றின் சக்கரப் பற்கள்
எனது வலிமையை, எனது சக்தியை
என் கண்ணெதிரிலேயே
துண்டு துண்டாக கிழித்தெறிகின்றன

நானொரு பெண்
எனது உயிரின் அமுதமான இரத்தம் குடித்து
சுரண்டுபவனின் பிண்டம் தடித்துக் கொழுக்கிறது
எனது இரத்தம் சுண்டுகின்றது
கந்து வட்டிக்காரனின் மூலதனம் ஊதிப்பெருக்கின்றது
ஏ, கேடு கெட்ட சுரண்டும் வர்க்கங்களே!
உங்களது வெக்கங்கெட்ட அகராதியிலே
பெண்களுக்கு என்ன தகுதி கொடுத்திருக்கிறீர்கள்?

(தொடர்ச்சி உள் பக்கம்)